விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 21 புதன்கிழமை (07.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

ரா ம் கோ — MADRAS CEMENTS LTD — RAMCO CEMENT — RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## மர்ம மனிதர்களை தாக்கக் கூடாது!

### இராணுவம் கூறுவது எதற்கு? உயர்மட்ட மாநாட்டில் கேள்வி!

(யாழ்ப்பாணம்) வீட்டில் இருப்பவர்களை மர்ம மனிதர்கள் தாக்கிக் காயப்படுத்தும் போது அவர்களை எதிர்த்து ஒன்றும் செய்யாதீர்கள் என்று இராணுவத்தினர் கூறுவது சமாதான சூழலில் தான் நாம் வாழ்கிறோமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் கடத்தப்பட்டு விடுதலை

சாவகச்சேரியில் மாணவன் ஒருவன் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை விட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது வாகனமொன்றில் வந்த சிலர் அம் மாணவனை (20 ஆம் பக்கம் பார்க்க)

## சீமான் உட்பட ஆயிரம் பேர் கைது!

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை தூக்கிலிடுவதற்கு (20 ஆம் பக்கம் பார்க்க)

## பதற்றத்தைக் கட்டுப்படுத்த ஆளுநர் தலைமையில் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மர்ம மனிதன் விவகாரத்தால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் விசேட செயற்குழு ஒன்று வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மர்ம மனிதர்களின் நடமாட்டம் தொடர்பில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பெற்றோலிய வளத் துறை அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இது குறித்துத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கடந்த 30 வருட காலமாக நாம் அனுபவித்த துன்பத்தில் இருந்து விடுபட்டு சமாதானமாக வாழும் இச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான சம்பவங்களையிட்டு அரசு கவலையடைகிறது.

யாழ்.மக்களின் பிரச்சினைகள் குறித்து (20 ஆம் பக்கம் பார்க்க)

## உயர் பாதுகாப்பு வலயக் காணிகளை உரியவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை

### அமைச்சர் நிமல் தெரிவிப்பு



உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள பகுதிகளிலுள்ள காணிகளை இயன்றவரை விரைவாக அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைப்பது குறித்து அரசாங்கம் ஆராய்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற சபை முதல்வரான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இத் தகவலை (20 ஆம் பக்கம் பார்க்க)

## கிறீஸ் மனிதனின் உருவாக்கத்துக்கு வெளிநாட்டு சக்திகளே காரணம்

### யாழ்.தளபதி தெரிவிப்பு



வெளிநாட்டுச் சக்திகளின் உதவியுடனே யாழ். குடாநாட்டில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காணப்படுவதாக யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் நேற்று நடந்த உயர்மட்ட மாநாட்டின்போதே அவர் இதனை கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

யாழ்.மாவட்டத்தில் கிறீஸ் பூதம் என்ற ஒன்றும் (20 ஆம் பக்கம் பார்க்க)

## மர்ம மனிதனின் மர்மம் அரசாங்கத்துக்குப் புரியும்!

### நாடாளுமன்றில் ரணில் உரை



(கொழும்பு)

அரசாங்கத்துக்கு மர்ம மனிதனின் மர்மம் புரியும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தும் போதே இதனைக் கூறினார்.

யாழ்ப்பாண மக்கள் மீதான கெடுபிடிகளை தடுக்க இராணுவத்திற்கு முடியாது போயுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

அரசாங்கம் இந்த விடயத்தை கருத்திற் கொண்டு யாழில் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக இது நடைபெறவில்லை. நாளிற்கு நாள் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. மர்ம மனிதர்கள் சம்பந்தமான பிரச்சினைகள் (20 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலை விமர்சித்து அறிக்கை

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றி குறித்த இலங்கை அரசின் விசாரணைகள் குறைபாடுகளைக் கொண்டது - அத்துடன் அது அனைத்துலக போர்க்குற்ற விசாரணைகளுக்குப் பதிலீடாக அமையாது என்று அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளை விமர்சித்து அனைத்துலக மன்னிப்புச் சபை 69 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

"அவர்களுக்கு எப்போது நீதி கிடைக்கும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த அறிக்கையில் இறுதிக் கட்டப் போரின் போது குறைந்தது 10 ஆயிரம் (20 ஆம் பக்கம் பார்க்க)

நாகரீக மாற்றத்திற்கேற்ப
புதிய வருகைகளுடன்...




நவீன் செரமிக்
No.212, Palaly Rd, Jaffna. ☎ 021 222 0033 / 021 222 0044
No.05, Stanly Rd, Jaffna. ☎ 021 222 4777 / 021 222 4888
Metro Engineering (Pvt) LTD

## பிளேக்கின் வருகை குறித்து எவ்வித அறிவித்தலும் இல்லை

### அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பு



அமெரிக்காவின் ஆசிய மற்றும் தென் மத்திய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயம் குறித்து இதுவரை எவ்வித அறிவிப்பும் வரவில்லை என இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே அமெரிக்கா (20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் துரிதப்படுத்தப்பட்டுள்ள டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன் கடந்த மாதத்தில் மாத்திரம் 2 இறப்புகள் ஏற்பட்டதையடுத்து இந்த வாரகாலப் பகுதியை விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பதினொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 83 கிராமங்களில் ஒலிபெருக்கி மூலமாக பிரசாரம் செய்யப்பட்டுள்ளதுடன் 64 இடங்களில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

38 இடங்களில் சிரமதான நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. 92 டிராக்டர் லோட் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 268 வீடுகளும், 110 பாடசாலைகளும், 141 வர்த்தக நிலையங்களும், 94 அரச, அரச சார்பற்ற அலுவலகங்களும், 36 சந்தை வடிகால்களும், 81 வணக்கஸ் தலங்களும், 102 பராமரிப்பற்ற காணிகளும் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 843 இடங்களில் டெங்கு நுளம்புகள் பெருக்கமடையக் கூடிய இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. கரவெட்டி, பருத்தித்துறை, சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய், யாழ். மாநகரசபை பகுதிகளில் 96 இடங்களில் எச்சரிக்கைக்கான சிவப்பு நிற ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டதுடன் யாழ். மாநகரசபைப் பகுதியிலும், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நவாலி, ஆனைக் கோட்டை, சுதுமலை, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் 23 பேருக்கு வழக்குத் தொடர்வதற்கான முன்னறிவித்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த, இந்த மாதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட டெங்கு நோயாளர்கள் பெரும்பாலும் கொழும்பு சென்று வந்தவர்களாக உள்ளதாலும், கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாகப் பரவி வருவதாலும் அவசியமற்ற வகையில் கொழும்புக்கு சென்றுவருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் அல்லது பகல் வேளையில் நுளம்புக்கடியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான உரிய வழிமுறைகளைப் பின்பற்றுமாறும் மக்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

நேற்றைய தொற்றுநோய் அறிக்கையின் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் 02 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இறப்புகள் ஏற்படவில்லை. மழை ஆரம்பித்திருப்பதால் நுளம்புகள் பெருகுமிடங்கள் தொடர்பில் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தினந்தோறும் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் ஊடகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு அறியத் தரப்படவுள்ளது. (ச)

# மருத்துவ பீடத்துக்கு முன் இன்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இயங்கும் தனியார் மருத்துவக் கல்லூரி சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்படுவதை ஆட்சேபித்து இன்று யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட முன்றலில் அடையாள ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இதுவரை காலமும் சட்டரீதியான அங்கீகாரமற்று இயங்கிக் கொண்டிருந்த தனியார் மருத்துவக் கல்லூரியானது,

சட்டபூர்வமாக்கப்பட்டு எம்.பி.பி.எஸ்.பட்டத்தினை வழங்க அனுமதித்ததனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்நடவடிக்கை மூலம் தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவக்கல்வியைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் இலங்கை மருத்துவச் சங்கம் (எஸ்.எல்.எம்.சி) சங்கத்தின் தரப்படுத்தல் பரீட்சையினை பூர்த்தி செய்யாமலே வைத்தியராக கடமையாற்ற வழிசமைக்கப்படுகின்றது என யாழ்.பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


வர்த்தகப் பெருமக்களே...

வியாபாரத்தைப் பதிவு செய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மெண்ட்

கொழும்பு-03 0729994777 0117902938


# பாலியல் துஷ்பிரயோகம் கிளிநொச்சியில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான நிலையில் யுவதி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கிளிநொச்சி பகுதியிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவ்வாறான சம்பவங்கள் கிளிநொச்சி பகுதியில் தற்போது அதிகரித்த நிலையில் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைய தகவலின்படி இரண்டு வருடங்களில் இம் மாவட்டத்தில் 15 யுவதிகள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்த பெற்றோர் உட்பட சமூக நலன் விரும்பிகளும், தொண்டுநிறுவனங்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அம் மாவட்டமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-4)

# நாவாந்துறையில் கைதான அனைவரும் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைக் கலவரத்தில் கைது செய்யப்பட்ட அனைவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 22ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் நாவாந்துறைப் பகுதியில் பொதுமக்களுக்கும் இராணுவம் மற்றும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில் அப்பகுதியில் கலவரம் ஏற்பட்டது.

கிறீஸ் மனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்களை பொதுமக்கள் துரத்திச் சென்றபோது அவர்கள் இராணுவ முகாமிற்குள் சென்று மறைந்ததையடுத்தே இந்தக் கலவரம் ஏற்பட்டது.

கலவரத்தையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இராணுவத்தினராலும் பொலிஸாராலும் அடித்து காயப்படுத்தப்பட்டதோடு 100 பேரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 91 பேர் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மீதி 09 பேரும் நேற்றையதினம் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ். மாவட்ட நீதிபதியும் நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவானுமாகிய ஏ.பிறேம்சங்கர் அனைவரையும் சரீரபிணையில் விடுவித்திருந்தார்.

அத்தோடு இந்த வழக்கை அடுத்த மாதம் 4ஆம் திகதிவரை ஒத்திவைத்தார். (எ-6)


75% OFF A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான

அனைவருக்கும் 75% கட்டணக்கழிவு

DMI COMPUTER EDUCATION



ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும் Spoken English பயிற்சிமையம்.

veta

Experts in English Training

Come, let's speak fluent English

- Diploma in Information Technology
- Diploma in PC Application
- Diploma in Microsoft Office
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Computerized Accounting
- Tally Financial Accounting Training
- Master Diploma in Multimedia & Animation

அங்கீகரிக்கப்பட்ட முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு

City & Guilds UK Approved Centre | veta Experts in English Training

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

பிரிவு II - 10/09/2011 9.30 am

பிரிவு III - 12/09/2011 9.30 am

பிரிவு III - 15/09/2011 9.30 am

இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணினி கல்வி நிறுவனம்.

DMI COMPUTER EDUCATION

No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243



வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

1Kg 800/=



- 72 மணி நேரத்தில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்.
- கடலுணவுப் பொருட்கள், எண்ணை வகைகள், மருந்துப் பொருட்கள் என்பனவும் அனுப்பி வைக்கப்படும்.
- அதிக எடையுள்ள பொதிகளுக்கு தீர்வை எதுவும் அறவிடாமல் ஒப்படைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள் மற்றும் அதனுடன் இணைந்த சேவைகள்.

உலகின் முன்னணி கூரியர் சேவை நிறுவனத்தின் முகவர்

Arrul Global Express

International Courier & Cargo Service

T.P : 021 222 6113

இல. 01 பிறவுண் வீதி நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பட்டப்பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

### வெளிவாரிப் பட்டப்படிப்பு பதிவு - 2010/2011

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் 2010/2011 கல்வியாண்டுக்கு பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாகப் பதிவு செய்ய விருப்புடைய, தகைமை பெற்றவர்களிடமிருந்து 04.11.2011 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வணிகமுதற் தேர்வு
2. கலை முதற் தேர்வு
3. பொது / சிறப்பு கலைமாணி பகுதி - 1 / வணிக இரண்டாம் தேர்வு
4. இசைமாணி / நடனமாணி முதலாம் வருடம்
5. இசைமாணி / நடனமாணி இரண்டாம் வருடம்
6. இசைமாணி / நடனமாணி மூன்றாம், நான்காம் வருடம்

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி பகுதி- 1 கற்கை நெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம், மெய்யியல், அரசறிவியல்.

| கட்டண விபரம் | ரூபா |
|---|---|
| விண்ணப்பப் படிவம் | 100.00 |
| பதிவுக் கட்டணம் | 1000.00 |
| பாடத்திட்டமும் விதி முறைகளும் | |
| கலைமுதற் தேர்வு | 250.00 |
| வணிகமாணி- (4 வருடங்கள்) | 650.00 |

விண்ணப்பப் படிவத்தையும், பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாகப் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் உரிய தொகைகளைச் செலுத்தியமைக்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்து எமது அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட, உரிய தொகைக்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28x20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், "உதவிப்பதிவாளர் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெளிவாரிப் பட்டப் படிப்பு பதிவு - 2010/2011" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 0212223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
06.09.2011


உடன்தேவை

மடப்பள்ளி அனுபவமுள்ள உதவி அந்தணர் ஒருவர் உடனடியாகதேவை. சுறுசுறுப்பும் விவேகமுமுள்ள ஒருவர் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :- 0776248780, 0777315507

(6066)



தேர்க்கயிறு (வடம்) விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதியதேர்க்கயிறு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : வீரபத்திர சுவாமி கோவில், பழைய வீதி, கோப்பாய் தெற்கு.

தொலைபேசி இல :- 0718475027

(6076)

## இன்று ஒரு தகவல்

# மனச்சுமை!

வைத்தியர் ஒருவர் இராணுவத்தில் இணைந்து வேலை செய்து கொண்டிருந்தார்.

போர் முனையிலே காயப்பட்ட வீரர்களுக்குச் சிகிச்சை அளிப்பது அவருடைய வேலையாகும். எல்லோரிடத்திலும் மிகவும் அன்பாக நடந்துகொள்வார். தன்னிடம் வருகிற நோயாளிகளை மிகவிரைவில் குணப்படுத்தி அனுப்பி வைத்து விடுவதில் வல்லவராக இருந்தார்.

அப்படி குணமாகிச் செல்கிற வீரர்களை இராணுவத்தலைமை மறுபடியும் யுத்த முனைக்கு அனுப்பி வைத்து விடுவது வழமையானதொன்றாகி இருந்தது.

ஒருமுறை இளம் போர்வீரன் யுத்த முனையில் காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியரிடம் வந்தான்.

அவருக்கு திருமணம் முடியவில்லை. யுத்த முனையில் நின்றபடியால் அவருடைய தோளிலேயும் தொடையிலேயும் குண்டு பாய்ந்திருந்தன.

வைத்தியர் மிகவும் கவனமாக அந்தக் குண்டுகளையெல்லாம் சத்திரசிகிச்சை மூலம் வெளியே எடுத்தார். காலப்போக்கில் அந்த இளைஞன் குணமடைந்தான்.

அவன் அங்கிருந்து போகும்போது வைத்தியரிடம் "இப்போது நான் மறுபடியும் போர் முனைக்குப் போகிறேன். சிறிது நாட்கள் சென்றபின்பு விடுப்பு எடுத்துக் கொண்டு எனது சொந்த ஊருக்குப் போகப் போகிறேன். எனது தாயார் எனக்குத் திருமண ஏற்பாடு செய்துள்ளார். ஊருக்குப் போய் திருமணம் செய்து வரவேண்டும்!" என்று உற்சாகத்தொனியில் கூறினார்.

வைத்தியரும் மிகவும் மகிழ்ச்சியாகத் தன்னுடைய நல்வாழ்த்துக்களைக் கூறி இளைஞனை வழியனுப்பி வைத்தார்.

சிறிது நாட்கள் கடந்த பின் அவருக்கு ஒரு செய்தி கிட்டியது.

அச்செய்தி என்னவெனில் சிகிச்சை பெற்ற "இளைஞன் போர் முனையிலே இறந்துவிட்டான்" என்பதாகும். இந்தச் செய்தி யைக் கேட்டதும் வைத்தியர் மிகவும் கலங்கிப் போனார். சிறிது சிந்திக்க ஆரம்பித்தார்.

"நான் குணப்படுத்துகிறேன் என்பதை விட மறுபடியும் அந்த யுத்த வீரர்கள் மரணத்தை சந்திப்பதற்கு தயார்படுத்துகிறேன் என்பது தான் பொருத்தம்" என்று நினைத்து கவலைப்பட்டார்.

தன்னிடம் வந்து குணமடைந்து செல்கிற வீரர்கள் எல்லோரும் போர்முனையில் இறந்து விடுவதாக அடிக்கடி அவருக்கு செய்தி வர ஆரம்பித்தது.

அவரால் சிறிதுகூட தாங்கமுடியவில்லை. அதனால் அவர் இராணுவத்தை விட்டு விலகினார்.

சில நாடுகளுக்குச் சுற்றுலா செல்ல ஆரம்பித்தார். அவ்வேளையில் தற்செயலாக ஒரு ஜென் குருவைச் சந்தித்தார். அவருடன் சில நாட்கள் தங்கியிருந்தார். அந்தக் காலப்பகுதியில் அவருக்கு ஒரு தெளிவு ஏற்பட்டது. யோசித்துப் பார்த்தார். இந்த உலகத்திலே பிறந்த எல்லா உயிர்களும் ஒருநாள் சாகப் பிறந்தவர்கள் தான். ஆனால் ஒன்று மட்டும் தெளிவாக இதிலிருந்து விளங்கிக் கொள்ளமுடிகிறது. இவர்கள் முன்ன பின்ன சாகிறார்கள் என்பதுதான்.

"எனது கடமை மருத்துவ சிகிச்சை வழங்குவது தான். தேவையற்ற எண்ணங்களை சுமப்பதற்கல்ல!" இப்படி ஒரு தெளிவு அவருக்கு ஏற்பட்டது.

அதன்பின் நேராக குருவிடம் சென்று விடை பெற்றார்.

மீண்டும் இராணுவத்தில் இணைந்தார். தனது களப் பணிகளை வழமைபோல ஆரம்பித்தார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# ஜனவரி முதல் மின்சார சபை ஊழியர்களுக்கு சம்பள நிலுவை

(கொழும்பு)

மின்சார சபை ஊழியர்களுக்கான சம்பள நிலுவையை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் காரணமாக மின்சார சபை தொழிற்சங்கங்கள் இன்று நடத்த இருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற விசேட கூட்டத்தையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டதாக மின்சாரசபை தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி தெரிவித்தது.

மின்சாரசபை ஊழியர்களின் சம்பள நிலுவை ஜனவரி மாதம் முதல் கட்டம் கட்டமாக வழங்கப்படும் என மின்சார சபைபொது முகாமையாளர் நேற்று முன்தினம் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் இதனையடுத்தே தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட முடிவு செய்ததாகவும் மின்சாரசபை தேசிய ஊழியர் சங்கச்செயலாளர் வீரசேகர தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பல்வேறு வர்த்தக பெயர்களில் மருந்துப் பொருட்கள் பதிவு

(கொழும்பு)

பல்வேறு வர்த்தக பெயர்களில் மருந்துப் பொருட்கள் பதிவு செய்யப்படுகின்றமையால் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் பல்வேறு வர்த்தக பெயர்களைக் கொண்ட சுமார் 40 ஆயிரம் மருந்துப் பொருட்கள் தற்போது பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சில மருந்துவகைகள் சுமார் 50 வர்த்தக பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவிக்கின்றது.

எனினும் இலங்கைக்கு மூவாயிரம் மருந்து வகைகளே தேவையென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள தேசிய ஔடதங்கள் சட்டத்தின் ஊடாக இந்த நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# தொண்டராசிரியர்களிற்கான கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களிற்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவுள் ளது.

எனவே, அனைத்து தொண்டராசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 120 | 60 |
| பச்சைமிளகாய் | 90 | 110 | 100 |
| தக்காளி | 30 | 60 | 30 |
| மரவள்ளிக் கிழங்கு | 45 | 50 | 50 |
| கோவா | 30 | 60 | 30 |
| கரட் | 50 | 80 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 60 | 30 |
| வாழைக்காய் | 40 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 40 | 100 |
| பெரிய வெங்காயம் | 70 | 65 | 80 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 70 |
| கருணைக் கிழங்கு | -- | 110 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 100 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 15 | 25 | 25 |
| கறிமிளகாய் | 70 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 60-90 | 180 | 100 |
| போஞ்சி | -- | 110 | 110 |
| கத்தரிதம்புள்ள | 70 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 8 | 20 | 15 |
| தேசிக்காய் | 150 | 110 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

07.09.2011
(ஆவணி 21, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
தசமி பிற்பகல் 1.08 மணிவரை
பூராடம் பின்னிரவு 1.18 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சுபநேரம் 4.34-6.04 மணிவரை

**மேடம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், குடும்ப உறுப்பினர்களுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பூமி யோகமுண்டு, தொழிலில் போட்டிகளை முறியடிப்பீர்கள்.

**இடபம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வெளியூர் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, செலவுகள் அதிகரிக்கும்.

**மிதுனம்** உற்றார் உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழும் நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர்.

**கடகம்** தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சியைத் தரும், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும், தொழிலில் முன்னேற்றம் காணப்படும், கௌரவமான நாள்.

**சிங்கம்** சிறப்பான நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், பூமியால் ஆதாயமுண்டு.

**கன்னி** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், தாய்வழி உறவினர் மூலம் அனுகூலமுண்டு.

**துலாம்** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், சகோதரர் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், செய்தொழில் வளர்ச்சிக்காக பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கலாம், புதிய திருப்பமான நாள்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, போசன சுகமுண்டு.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கும்பம்** உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளமிடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சியால் இலாபம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**மீனம்** வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்பால் உங்களின் தகுதி உயரும், தொழில் ரீதியாக புதிய சிந்தனைகள் தோன்றும்.

வளவன்

# சிறுகச் சொல்லி உயர்ந்தபட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதான ஒரு படைப்பே சிறுகதை

## சிறுகதைப் பயிலரங்கில் கலாநிதி கலாமணி உரை



(யாழ்ப்பாணம்)

சிறுகதை பற்றிய அடிப்படைகளை அறிந்து கொண்டு எழுத்துத் துறையில் ஈடுபடுபவர்களாலேயே நல்ல கதைகளைப் படைக்க முடியும் என யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டத்துறை தலைவரும் எழுத்தாளருமாகிய கலாநிதி த.கலாமணி தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையால் அண்மையில் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்ட சிறுகதை பயிலரங்கில் **சிறுகதையின் அமைப்பும் உள்ளடக்கமும்** எனும் தலைப்பில் கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிறுகதை என்பது சிறிய அளவிலான கதையன்று. அது சிறுகச் சொல்லி உயர்ந்தபட்ச தாக்கத்தை ஏற்படுத்துவதான ஓர் உரைப் படைப்பு. ஒரு சம்பவத்தின் அடியாகத் தோன்றும் உணர்வு நிலையையோ, ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தின் மனோநிலை தொடர்பான அதன் இயக்கத்தையோ இலக்கிய உணர்வுடன் கலாபூர்வமாகச் சித்திரிப்பதற்கு ஒத்த வடிவமாகச் சிறுகதை விளங்குகிறது.

சிறுகதையின் அடையாளம் அதன் முடிப்பிலுள்ள திருப்பம். அதாவது எதிர்ப்பாராத முடிவு என்பர்.

இதுவே சிறுகதையின் அடிப்படை இலக்கணம் ஆகும்.எந்த நோக்கத்தை மையப்படுத்தி ஒரு கதை எழுதப்படுகிறதோ அதன் பொருட்டே கதையின் எல்லா விடயங்களும் அமைந்திருக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ஶ்ரீ-4-17)

## ஆதனவரி மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் முதற்கட்டமாக உரும்பிராய் உப அலுவலகத்தின் ஆதன வரியினை மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் இன்று முதல் விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்ஆதன மீள் மதிப்பீட்டின் மூலம் சபையின் வருமானத்தினை பெருக்கி ஆக்கபூர்வமான சேவையினை வழங்குவதற்கு பிரதேச மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு வலி.கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஶ்ரீ-12)

## மின் தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர முத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின் கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணிமுதல் 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் இன்று இணுவில், மருதனார் மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி,. கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர் , அரியாலை, தென்மராட்சி பிரதேசங்களிலும் நாளை வியாழக்கிழமை உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் மின்சாரம் தடைப்படும்.

நாளைமறுதினம்வெள்ளிக்கிழமைஇணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசங்களிலும் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதியிலும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-12)

## வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ளாதோரின் பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படும்

### யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது வாக்காளர் பதிவுகளை மக்கள் மேற்கொள்ளாது விட்டால் அவர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் என எச்சரிக்கை விடுத்த யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் கோரியுள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் இடாப்பு பதிவுகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் தமது வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அங்கு பதிவுகளை மேற்கொள்ளாவிட்டால் அவர்களது பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படும் என்றார். மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மாத்திரமே கடந்த வருட வாக்காளர் இடாப்பு பயன்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் புதிதாக வாக்காளர் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தப் பகுதிகளில் வாக்காளர்களாகப் பதிவுகளை மேற்கொள்ளாவிடின் அவர்களினது பெயர்கள் வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கப்படும்.

ஆயினும் விடுவிக்கப்பட்ட இடங்களில் மீள்குடியமராத வாக்காளர் தாம் வசிக்கும் இடங்களில் வாக்காளர் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை வாக்காளர் இடாப்பு பதிவுகள் தொடர்பில் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் தேர்தல் ஆணையாளரினால் விசேட விண்ணப்பப்படிவம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)




## சட்டவிரோத மதுபான விற்பனையால் சீரழிந்து வரும் குடும்பங்கள்

(மிருசுவில்)

மிருசுவில் வடக்கு, போக்கட்டி ஆகிய பிரதேசங்களில் அண்மைக்காலமாக சட்ட விரோத மதுபான விற்பனை இடம்பெற்று வருகின்றது.

இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, மேற்படி இடங்களில் சட்டவிரோதமான முறையில் சாராயம், கள் என்பன வீடுகளில் வைத்து விற்பனை செய்யப்படுவதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுலபமாக அதனைப் பெற்று அருந்தி வருகின்றனர்.

இதனால் மது அருந்துபவர்களது குடும்பங்களிலும் அயலிலும் சண்டைகள், சச்சரவுகள் இடம்பெறுகிறது.இதனால் சிறுவர்கள், இளைஞர்களினது எதிர்காலம் சீரழிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு இவ்வாறான இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுப்பதன்மூலம் எதிர்கால சந்ததியினரை குடிப்பழக்கத்தில் இருந்து விடுவிக்கமுடியுமென அப்பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஶ்ரீ-12-85)

## இராமகிருஷ்ணமிசனின் யாழ்ப்பாணக்கிளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

இராமகிருஷ்ண மிசனின் யாழ்ப்பாணக்கிளை இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் வீதி, உரும்பிராய் சந்திக்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் பூஜை, பஜனை, ஹோமம், பேச்சு,மங்களாராத்தி என்பன நடைபெறவுள்ளதாக கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா அறிவித்துள்ளார். (ஶ்ரீ-4)

## தீர்த்தக்கேணி, தீர்த்தமண்டப புனருத்தாரண விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு ஶ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில் தீர்த்தக்கேணி, தீர்த்த மண்டபம் புனருத்தாரண விழா நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 6.04 மணி தொடக்கம் 6.30 மணிவரையுள்ள சுப வேளையில் தீர்த்த மண்டப கலசாபிஷேகமும் தீர்த்தக் கேணியில் சப்ததீர்த்த சங்கிரண பூசையும் நடைபெறும். (ஶ்ரீ-12)





யாழ்.குடாநாட்டு மக்களிடையே அண்மைக்காலமாக நிலவிவரும் பதற்றநிலை தொடர்பான கலந்துரையாடல் யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த உள்ளிட்ட விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட புத்திஜீவிகள், கல்விமான்கள் உட்பட்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# வடக்கில் உருவாக்கப்படும் இராணுவ ஆட்சிக்கு எதிராக தமிழ் மக்கள் போராட வேண்டும்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் உருவாக்கப்படும் இராணுவ ஆட்சியின் பலாத்காரத்திற்கு எதிராகவும் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்காகவும் போராட வேண்டும். இதனையே வடக்கில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையேற்று நடத்திவருகின்றது என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இப்போது ஜே.வி.பி. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் எமது அரசியல் நடவடிக்கைகளை நேரடியாகவும் துரிதமாகவும் முன்னெடுத்து வருகின்றது. விசேடமாக வடக்கில் யுத்தம் முடிவுற்றதன் பின்னரே எமது அரசியலை முன்னெடுப்பதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது.

நாம் இதற்கு முன்னர் 1983 ஆம் ஆண்டு வரையில் வடக்கு, கிழக்கில் எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். ஆனால், அங்கு யுத்தம் தோன்றி அங்கு எமக்கெதிரான அச்சுறுத்தல்கள் தோன்றியதன் காரணமாகவும் 1983 இல் ஜே.வி.பி. தடை செய்யப்பட்டதன் காரணமாகவும் அந் நடவடிக்கைகள் பிற்காலத்தில் தடைப்பட்டன எனவும் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பேட்டியொன்றில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

இப்போது நாங்கள் மீண்டும் வடக்கில் அரசியல் பணிகளை தொடர ஆரம்பித்துள்ளோம். இப்போதும் அரசாங்கத்தினதும் பாதுகாப்பு படைகளினதும் அச்சுறுத்தலின் மத்தியிலும் எமது நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றோம்.

வடக்கு மக்கள் மத்தியில் நிலவும் சந்தேகம், நம்பிக்கையீனம் மற்றும் தவறான புரிதலின் காரணமாக, தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலைமைகளை மாற்றியமைத்து எமது அரசியலை வடக்கு, கிழக்கு மக்கள் மத்தியில் ஓரளவுக்கேனும் கொண்டு செல்வதில் நாம் வெற்றி கண்டுள்ளோம்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கில் சில சபைகளுக்கு வேட்பாளர்களை நியமித்து தேர்தலில் போட்டியிட்டதே எமக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். அதேபோன்று வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு நாம் அவர்களோடு இணைந்து செய்யும் போராட்டமும் ஆர்ப்பாட்டங்களும் பல இடையூறுகளுக்கு மத்தியில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றல், அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல், காணாமல் போனவர்கள் பற்றிய பிரச்சினை மற்றும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர், யுவதிகளின் பிரச்சினை என பலதரப்பட்ட பிரதான பிரச்சினைகளுக்காக அவர்களுடன் வடக்கு, கிழக்கு மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கும் போராடுவதற்கும் எம்மால் முடியுமாயிருக்கிறது.

இவற்றுக்கு மேலாக பல தடைகள் விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் அப் பிரதேச மக்கள் எம்முடன் கைகோர்த்துக் கொண்டிருப்பதை குறிப்பிட்டேயாக் வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் அவர்களுக்கான சம வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டுமென்றும் நாம் கூறுகின்றோம்.

ஆனாலும், அதிகாரத்தை பகிர்வதன் மூலம் சாதாரண தமிழ் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பதினால் அது தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. அது தவறானது. அதற்குப் பதிலாக நாம் உண்மையான தீர்விற்காக போராட வேண்டும்.

தமிழ் மக்கள் தம்மை விசேடமாக பாதிக்கும் பிரச்சினைகளுக்காகவும் தமது உரிமைகளுக்காகவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் முகம்கொடுக்கின்ற அநீதிகளுக்கு எதிராக ஒன்றிணைந்த பொது போராட்டத்திற்கு வரவேண்டுமென நாம் திடமாக நம்புகிறோம்.

தற்போது தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் அவசர பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக போராட வேண்டும். வடக்கில் உருவாக்கப்படும் இராணுவ ஆட்சியின் பலாத்காரத்திற்கு எதிராகவும் ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்காகவும் விடுதலைக்காகவும் போராட வேண்டும்.

காணாமல் போனவர்களின் பிரச்சினை, கைது செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்து கொள்வதற்காக இடம் பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், அவர்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக அரசாங்கத்திற்கு எதிராக போராட வேண்டும்.



அப்போராட்டத்திற்கு நாம் உயர்ந்த பட்சபங்களிப்பினை வழங்கத் தயார்.

அதே போன்று நீண்டகாலத்திற்கான சமூக மாற்றத்திற்கான அரசியலை தெரிவு செய்தாக வேண்டும். அதற்காக அணி திரளும் படி நாம் அவர்களை கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

(ஸ்ரீ-2)

## ஐ.தே.கவை பலவீனப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது

### ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு



ஐக்கிய தேசியக் கட்சியினை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய்வதாக அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

கொழும்பு மாநகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு துறைமுகத்தை அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்வதாக சுட்டிக்காட்டிய ரவி கருணாநாயக்க அரசாங்கம் கொழும்பு நகரத்தை அழிப்பதாகவும் இதன் போது குறிப்பிட்டுள்ளார். கொழும்பு துறைமுகத்தில் 5 ஆயிரத்து 500 மில்லியன் கொள்கலன்கள் கையாளப்படுவதாகவும் இந்த வருடத்தின் எட்டு மாதங்களுக்குள் அம்பாந்தோட்டைக்கு நான்கு கப்பல்களே சென்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்கள் இல்லையென குறிப்பிட்ட ரவி கருணாநாயக்க அம்பாந்தோட்டை, கண்டி மற்றும் கம்பளையில் இருந்து வருபவர்களுக்கே தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இது நியாயமான நடவடிக்கையா எனவும் அவர் இதன் போது கேள்வியெழுப்பியுள்ளார்.

(ஸ்ரீ-2)

## கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து வெற்றி



யாழ்.கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஐயாத்துரை ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்.மாவட்ட முதல்தர அணிகளான ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றி வாகை சூடியது.

யாழ்.கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் கரப்பந்தாட்டத்திடலில் நடைபெற்றது.

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எவ்.றஜீவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஜே/261 கிராம சேவையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் எ.ஆர்.இராசசேகரம்,யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டத்தின் தலைவர் கே.ஏகாம்பரம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக லயன் வி.சுப்பிரமணியமும் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2)

நன்றி நவில்கின்றோம்

காரைநகர் இடைப்பிட்டியை வதிவிடமாக கொண்ட திருமதி **சிவபாக்கியம் ஆறுமுகம்** அவர்களது மறைவு அறிந்து எமக்கு சகல வழிகளிலும் ஆறுதல் கூறி மலர் வளையம் அனுப்பியும் நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமாகவும் துன்பத்தில் பங்கு கொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இடைப்பிட்டி,
காரைநகர்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(6074)

BCBS CAMPUS

298B, R.A. De Mel Mawatha
Colombo-3.

Spot Admission With Representatives in Jaffna

- சாதாரணதரசித்தி (O/Level) தகைமை இல்லாமலும் IELTS தகைமை இல்லாமலும் UK Visa களை பெறவும்,
- France இல் கல்வி & வேலைவாய்ப்பு இரண்டையும் ஒரே நேரத்தில் தொடரவும், கல்வியை முடித்த பின்பு 2 ஆண்டுகள் வேலைவாய்ப்பு வீசாக்களையும் பெற முடியும்.

UK Universities களின் Dgree & MBA போன்ற பட்டப் படிப்புக்களை இலங்கையில் இருந்தவாறே குறைந்த கட்டணத்தில் பூர்த்தி செய்ய முடியும்.


கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கு Migration சேவைகளும் செய்து தரப்படும்.

அழையுங்கள்:-

077 2227393 -Sharmi (தமிழ்மொழி மூலம்)
077 2008110-Mahesh (ஆங்கில மொழி மூலம்)

(C-4340)

# யாழ். மாவட்ட விவசாயக்கண்காட்சி- 2011




ஆர்.ஜெயசேகரன்

யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் விவசாயக் கண்காட்சியானது பொதுமக்களுக்கு பயன் தரக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயிகளுக்கு இந்தக் கண்காட்சியில் பயன்படுத்தப்பட்டுள்ள நடை முறைகள் மிகவும் பயனளிக்கக் கூடியதாகவுள்ளது.

வீட்டுத் தோட்டங்கள், மூலிகைத் தோட்டங்கள், கால்நடை வளர்ப்பு என்பன மிகவும் நுணுக்கமாக இங்கு பிரிவு பிரிவாக அமைக்கப்பட்டுள்ளதுடன் நேர்த்தி யான முறையில் இடப்பற்றாக்குறை காணப்படும் பிரதேசங்களில் மரக்கறி உற்பத்திகளை இலகுவாக மேற்கொள்ளக் கூடிய வழிவகைகளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

வீடுகளில் மிகவும் குறுகிய காலத்தில் பயன்பெறக் கூடிய வகையில் மனைப் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் உற்பத்தி செய்யக்கூடிய மரக்கறி தோட்டங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்பதை இந்தக் கண்காட் சிகள்மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு இந்தக் கண்காட்சி மிகவும் பயனளிக்கக் கூடியதாகவுள்ளது.



மாணவன் சு.சஞ்சீவன்

நிலப்பற்றாக்குறை காணப்படும் பிரதேசங்களிலும் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யமுடியும் என்பத்தை இந்தக் கண்காட்சி மூலம் அறிந்து கொண்டேன்.

2011ஆம் விவசாயக் கண்காட்சிக்கென அமைக்கப்பட்ட வரவேற்பு வாயில் மிகவும் நேர்த்தியாக, அழகான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி விவசாயத்திற்கு முக்கியமானது நீர்ப் பாசனம்.அதனை நெல் உற்பத்தியிலும் வீட்டுத் தோட்டங்கள் மரக்கறி செய்கையிலும் மிகவும் நுணுக்கமாக மேற்கொள் ளப்பட்டுள்ளது.

அதுதவிர நாற்றுமேடைகள் பனை, தென்னை உற்பத்திகள், மீன் வளர்ப்பு, இறால் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு என்பனவும் மிகவும் அழகாகவுள்ளது. அரியவகை மூலிகைத் தோட்டங்கள், மரங்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது வரவேற்கத்தக்கது.

யு.எல்.எம்.ஹால்தீன்

வடமாகாணத்தில் விவசாயத்துறை பாரிய வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை இந்த விவசாயக் கண்காட்சி வெளிக் காட்டுகிறது. கடந்த 30 ஆண்டுகாலமாக நாட்டில் இடம்பெற்று வந்த யுத்தம் இவ்வாறான துறைகளை முன்னேற்றம் அடையவிடாது தடுத்து வந்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் வடமாகாணத்தில் விவசாயத் துறையை விருத்தியடைய செய்யும் நோக்குடன் புதிய தொழில்நுட்ப சாதனங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதன்மூலம் விவசாயத்துறையை விரைவான அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு சென்று வருமானத்தை அதிகரிக்க முடியும். விவசாயத்துறை காலத்திற்கு காலம் பல்வேறு மாற்றங்களை கண்டு வருகிறது. இதனை இக்கண்காட்சி மூலமும் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். சுயதேவைகளுக்கு மேலதிகமான உற்பத்திகளை நெல் உற்பத்தியில் இலங்கை தற்போது பெற்று வருகிறது.

இவ்வாறு பல பயிர்ச்செய்கைகளிலும் போதியளவு உற்பத்தியை பெற வேண்டும். குறிப்பாக அதிக வருமானத்தை பெற்றுத் தரக் கூடிய விவசாய செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். உலக நாடுகள் பொருளாதாரத்தில் பின்னடைவைக் கண்டபோதிலும் எமது நாடு அத்தகைய நிலைக்கு தள்ளப்படாததற்கு விவசாயிகளின் பங்களிப்புத்தான் காரணம்.

ஜனாதிபதி அவர்கள் ஒரு மில்லியன் வீட்டுத் தோட்டங்களை அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்து மனைப் பொருளாதாரத்தை விருத்தி செய்து வருகிறார்.

நெல் உற்பத்தியில் எமது நாடு எவ்வாறு தன்னிறைவு கண்டதோ அதேபோன்று பழ உற்பத்தி, மரக்கறி உற்பத்திகள், கால்நடைவளர்ப்பு போன்றவற்றிலும் தன்னிறைவு பெற வேண்டும். அதற்கான முன்னேற்பாடாகவே இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இ.ஜனக்குமாரன்

விவசாயிகளுக்கு மட்டுமல்லாது கால்நடை வளர்ப்பு, அலங்கார மரங்கள், செடிகள் விற்பனை செய்பவர்களும் பயன் பெறக்கூடிய வகையில் இந்தக் கண்காட்சி அமையப் பெற்றுள் ளது.

ழ்.மாவட்டத்தில் விவசாயம் மேற்கொள்ளக்கூடிய வசதிகள் இருந்தும் பலர் தமது வீடுகளில் இவ்வாறான வீட்டுத் தோட்டங்களை அமைப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

வீடுகளில் வீசப்படும் கழிவுப் பொருட்களின் மூலம் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்து எமது வீட்டுத் தேவைகளை நாமே பூர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகளை இந்தக் கண்காட்சி மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

அதுமட்டுமன்றி மிகவும் குறுகிய காலத்தில் பயன்தரக்கூடிய பலன்தரும் மரங்கள் பலவும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



எஸ்.மாணிக்கராசா

50 இலட்சம் ரூபா செலவில் மிகவும் பிரமாண்டமான முறையில் இந்தக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மட்டும் பயனளிக்க கூடியதாக அமையாது. பார்ப்பவர்கள் அனைவரும் தமது வீடுகளில் பொழுது போக்காக தோட்டங்கள் அமைத்து பயன்பெறக் கூடியதாக இந்தக் கண்காட்சி அமையப் பெற்றுள்ளது.

நோய்கள் இல்லாத தாவரங்களையும் மரக்கறி வகைகளையும் உற்பத்தி செய்யும் வழிமுறைகளும் அதற்கான மாதிரிகளும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நவீன முறை விவசாயம், பாரம்பரியமாக செய்யப்படும் விவசாயம் இரண்டும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. வீடுகளில் பயன்படுத்தப்படாது இருக்கும் இடங்களிலும் விவசாயத்தை செய்து பயன்பெற முடியும் என்பதை இந்த விவசாயக் கண்காட்சி மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.



செல்வி வைத்தியலிங்கம் வசந்தி

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு ஏற்ற வகையில் வீட்டுத்தோட்டம், கால்நடைவளர்ப்பு , மூலிகைத் தோட்டம் போன்றவற்றை மிகவும் குறுகிய இடத்தில் தெளிவான முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மரக்கறி வகைகளை குறைந்த-நிலப்பரப்பில் உற்பத்தி செய்து கூடிய பயனைப் பெறமுடியும் என்பதனை இந்த விவசாயக் கண்காட்சி எடுத்துக் காட்டுகிறது.

அதுமட்டுமன்றி நான் அவதானித்தவரை இயற்கைப் பசளையை கொண்டே இந்த மரக்கறி வகைகளை உற்பத்தி செய்துள்ளனர்.

அத்தோடு இங்கு காட்சிப்படுத்திய விலங்கு இனங்கள் மிகவும் பெறுமதியான நிலையில் உள்ளது. இவற்றில் சில விலங்கினங்கள் அரியவகையானவை.

மேலும் இரசாயன கிருமிநாசினிகளின் பயன்பாடு இன்றி உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் மூலம் மனிதனுக்கு ஏற்படும் பல நோய்களை கட்டுப்படுத்த முடியும்.

வீட்டுத் தோட்டம் கால்நடை வளர்ப்பு, அலங்கார மரக்கன்றுகள், செடிகள், மூலிகைத் தோட்டம் என்பவற்றைப் பார்க்கும் போது பசுமைப் புரட்சிக்கு வித்திடுவதாகவுள்ளது.

அத்தோடு மிகவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ள காளான் உற்பத்திகள், குறுகிய காலத்தில் பலன் தரக் கூடிய மரங்கள் என்பன இந்த விவசாயக் கண்காட்சியைப் மெருகூட்டுவதாகவுள்ளது.



திருமதி அ.மேரியம்மா

வீடுகளில் அன்றாடத் தேவைகளுக்காக கடைகளில் வாங்கும் மரக்கறிகளை நாமே உற்பத்தி செய்து பயன் படுத்தமுடியும் என்பதை இந்த விவசாயக் கண்காட்சி மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வதற்கு அதற்கென ஒதுக்கப்பட்ட இடம் தேவையில்லை.

வீட்டின் கரையோரங்களில் பைக்கற்றுக்களில் குறிப் பாக உரபாக்கில் மண்ணினை நிரப்பி அதில் மரக்கறி களை உற்பத்தி செய்து கொள்ள முடியும்.

இதை பலவருடங்களாக எனது வீட்டிலும் நான் செய்து வருகிறேன்.

குறிப்பாக எமது பிரதேசங்கள் கடற்கரை சார்ந்த பிரதேசங்கள். அங்கு மரக்கறி வகைகளை உற்பத்தி செய்வது கஷ்டம். இருப்பினும் இந்தப் பைக்கற்றில் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும்முறைமூலம் பயனடைந்துள்ளேன்.


இதனை அனைவரும் தமது வீடுகளிலும் செய்து பயன்பெற முடியும்.அதற்கு இந்த விவசாயக் கண்காட்சி நல்லதொரு எடுத்துக் காட்டு.

என். ராஜதேவன்


கடந்த காலங்களில் விவசாயத்துறை மட்டுமல்லாது பல துறைகள் முடக்கப்பட்டிருந்தன. அவை தற்போது தான் விருத்தியடைந்து வருகிறது. அவற்றுக்கு இந்த விவசாயத்துறை கண்காட்சியை உதாரணமாக கொள்ள முடியும்.

மக்கள் பயன்படுத்தக்கூடிய நிலங்கள் யுத்தத்தால் அழிவடைந்து காணப்பட்டதன் காரணமாக உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்பட்டது. அவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டு வளர்ச்சி நிலையை கண்டு வருகிறது.

விவசாய மக்களுக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரக் கூடிய பயிர்செய்கைகளையும் அதற்கான வழி முறைகளையும் வழங்க வேண்டும். அப்போது தான் விவசாயத்துறை தன்னிறைவை அடைய முடியும்.







# அடுத்த வரவு- செலவுத்திட்டம் தொடர்பாக ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

(கொழும்பு)

கடந்த 2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதற்கு தேவையான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கேட்டறியும் வகையிலான கலந்துரையாடலொன்று அலரி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலின் போது பாராளுமன்ற விவகாரம் தொடர்பிலான அமைச்சிடமிருந்து கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் என்பன பெற்றுக் கொள்ளப்பட்டன.

சிறந்த மக்கள் சேவையொன்றை வழங்குவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படவேண்டிய திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற கட்டளைச் சட்டங்கள் தொடர்பில் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டுமென இதன்போது ஜனாதிபதி கூறியுள்ளார்.

உறுப்பினர்கள் குழுவை பயிற்றுவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்கறிக்கைகளில் குழப்பநிலை

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்கு அறிக்கைகளில் பாரிய குழப்பநிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீண் செலவுகள், பிழையான சொத்து பதிவுகள், நிதி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு குளறுபடிகள் காணப்படுவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்த பிரதேசத்தில் நிறுவனத்திற்கு சொந்தமான 67 மில்லியன் ரூபா பெறுமதியான காணிகள் இருப்பதாக கணக்கு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அதற்கான காணி உறுதி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டதாக செலவு விபரங்களில் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான விபரங்கள் இணைக்கப்படவில்லை.

வரி தொடர்பிலும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு அமைச்சர் டியூ குணசேகர தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் இந்த மோசடிகள் குறித்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஸ்ரீ-2)

# பூநகரிப் பிரதேச கலாசார பேரவை — நடத்தும் கலாசார விழா —

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் கலாசார விழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு முழங்காவில் மகாவித்தியாலய மண்டபத்தில் பூநகரி உதவி அரசாங்க அதிபரும் பூநகரி கலாசார பேரவையின் தலைவருமான கே.எஸ். வசந்தகுமார் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதி பிரதம செயலாளர் தி.இராசநாயகம், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி என். ஸ்ரீதேவி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் காலை, மாலை நிகழ்வுகளென இரு பிரிவாக நடைபெறும் இந்நிகழ்வில் கலை நிகழ்வுகள் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அரங்கிலும் மாலை நிகழ்வுகள் முன்னாள் அரச அதிபர் க. பெர்ன்னம்பலம் அரங்கிலும் இடம்பெறவுள்ளது.

அத்தோடு சிறப்பு நிகழ்வாக இவ் விழாவையொட்டி புகுந்துணர் எனும் சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது.

கோவலன்கூத்து உட்பட பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் இவ் அரங்கில் நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-12-84)

# சம்பூர் அனல்மின் நிலையத்திற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

(கொழும்பு)

திருகோணமலை சம்பூரில் 500 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய இரண்டாவது நிலக்கரி மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பது தொர்பான ஒப்பந்தம் நேற்று காலை இந்திய -இலங்கை அதிகாரிகளினால் கைச்சாத்திடப்பட்டது.

இந்திய- இலங்கை அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்ட இது தொடர்பான வைபவத்திற்கு வலு மற்றும் சக்தி அமைச்சர் பாட்லி சம்பிக்க ரணவக்க தலைமை தாங்கினார்.

இந்திய அரசுக்கு சொந்தமான தேசிய அனல்மின் தனியார் கம்பனியும் இலங்கை மின்சாரசபையும் இக்கூட்டு முயற்சியில் சமவளவான பங்கை கொண்டிருக்கும்.

இலங்கை அரசாங்கம் இந்த மின்நிலைய செயற்றிட்டத்துக்கான உட்கட்டமைப்பை செய்துகொடுக்கும் என இந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. நிலக்கரியை இறக்குவதற்கான இறங்குதுறை, இதற்கான இயந்திரங்கள் என்பன இவற்றில் முக்கியமானவை. இந்த மின்நிலையம் ஒவ்வொன்றும் 250 மொகவோட் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு அலகுகளைக் கொண்டிருக்கும்.

இலங்கை மின்சாரசபையின் நீண்டகால அபிவிருத்தி திட்டத்தின்படி 300 மொகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய 3 மின்னுற்பத்தி நிலையங்கள் புத்தளத்திலும் அமைக்கப்படும். இதில் ஒன்று பூரணப்படுத்தப்பட்டு இவ்வருடம் மின்னுற்பத்தியை தொடங்கிவிட்டது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2005 இல் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டிருந்தபோது இந்த திட்டத்துக்கான திட்டமுன்மொழிவு ஆராயப்பட்டது.

(ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வேப்பம் பூ

**Botanical Name: Ayadiracta indica**
**Family: Meliaceal**
**English: Neem tree**
**sinh: Hohomba**

பெரியமரவகுப்பைச் சேர்ந்ததாகும். கூட்டிலை ஒழுங்கமைப்பு, இலை ஒன்றுவிட்ட ஒழுங்கமைப்பு, சிறிய இலைகள், எதிரான ஒழுங்கமைப்பும், இலையில் சமாந்தரமற்றதாகவும் காணப்படும். இதன் பூக்கள் கொத்தாகவும் 5 சிறிய இதழ்களைக் கொண்டதாகும். இருபாலானவை. பூவின் சூலகத்தண்டு உருண்டையானது. நீண்டது பூந்துனர் குறுகியது.

பழங்களில் ஒருவிதை காணப்படும். வித்துறை தடிப்பானது.

பூக்கள் பங்குனி மாதம் தொடக்கம் வைகாசி மாதம் வரை காணப்படும்.

இக்காலப்பகுதியில் பூக்களை சேகரித்து நிழலில் உலர்த்தி பத்திரப்படுத்தி தேவையான போது பயன்படுத்த வேண்டும்.


ஒருவருடம் வரை முறையாக பதப்படுத்தி பாதுகாத்த பூக்களை பயன்படுத்தலாம்.

சாதாரண வேம்பு, மலைவேம்பு, சர்க்கரை வேம்பு ஆகிய மூன்றின் பூக்களையும் மருந்தாகப் பயன்படுத்தலாம்.

3 பூக்களும் ஒரே தன்மையான மருத்துவக்குணம் கொண்டதாகும்

மரத்திலிருந்து பூக்களைப்பறித்தவுடன் சிலர் பச்சடி, இரசம் ஆகியன தயாரித்து உணவுடன் சேர்த்து உண்கிறார்கள். இது தவறு. அதன் மருத்துவக்குணங்கள் அனைத்தும் கிடைக்கப்பெற வேண்டுமாயின் பூக்களை பறித்துக் காற்றோட்டமுள்ள பாத்திரத்தில் பத்திரப்படுத்த வேண்டும். அப்பூக்களின் நிறம் மாறி வதங்கிய பிறகு பயன்படுத்துவதே முறையாகும். இதனை தேரையர் எனும் சித்தர் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார்.

நாட் சென்ற வேப்பம் பூக்கள் பித்த அதிகரிப்பினால் ஏற்படும் சத்திமூச்சை எனும் மயக்



கம், வாந்தி, சுவையின்மை, அஜீரணம், நீடித்தகால வாதநோய்கள் ஆகியவற்றை குணமாக்கவல்லது.

❀ வேப்பம்பூக்களைச் சேகரித்து நிழலில் உலர்த்தி நன்கு உலர்ந்த பின்பு இடித்து தூளாக்க வேண்டும். மெல்லியதுணியில் வடிகட்டி எடுக்கவேண்டும். வடிகட்டிய தூளில் நான்கு விரலளவு எடுத்து தேனில் குழைத்து உட் கொள்ள வேண்டும். தினம் இருவேளை வீதம் தொடர்ந்து உட்கொண்டால் பித்த அதிகரிப்பால் ஏற்படும் மயக்கம் குணமாகும். பித்தம் தணியும்

❀ இதே வேப்பம் தூளை நான்கு விரலளவு எடுத்து வெந்நீரில் உட்கொண்டால் அஜீரணத்தால் ஏற்படும் வாந்தி தீரும்.

❀ வேப்பம்பூத்தூளில் நான்கு விரலளவு எடுத்து இஞ்சிச்சாற்றில் கலந்து உட்கொண்டால் அடிக்கடி ஏற்படும் ஏப்பம் குணமாகும்.

❀ வேப்பம்பூத்தூளில் ஒன்று தொடக்கம் 2 கிராம் அளவு எடுத்து அதேயளவு சுக்குத் தூள் சேர்த்து பசு நெய்யில் குழைத்து உண்ண வேண்டும். அதனால் நீடித்த நாள் உள்ள வாத நோய்கள் குணமாகும். நீண்டநாட்களிற்கு இரு வேளை உண்ண வேண்டும்.

❀ வேப்பம்பூதூளை நான்கு விரலளவு எடுத்து 2 விரலளவு பெருங்காயம் சேர்த்து வெந்நீரில் கரைத்து உட்கொண்டால் அவ்வப்போது ஏற்படும் வாய்வுக்கோளாறு தீரும்.

❀ உடற்சூடு தணிவதற்கு வேப்பம்பூத்தூள் 2விரலளவு எடுத்து கொத்தமல்லிக் குடிநீரில் கலந்து உட்கொள்ள வேண்டும்.

❀ உடல்பலம்பெற வேப்பம்பூக்களை தேனில் ஊறவைத்து வேப்பம்பூ குல்கந் தயாரிக்கலாம். இதில் ஒரு சிறு உருண்டையை இரவு படுக்கைக்கு செல்லும்முன் வாயில் போட்டு விழுங்கிவிட்டு வெந்நீர் குடித்து வந்தால் உடல் பலம் பெற்று எந்த நோயும் அணுகாது.

❀ 200 மில்லி தண்ணீரில் இரண்டு பிடியளவு வேப்பம் பூவைப்போட்டு ஊறவைத்து 4மணி நேரம் ஊறியபின்பு வேப்பம் பூவை கசக்கிப்பிழிந்து எடுக்கவேண்டும். அந்த நீரை வடிகட்டி வைத்துக் கொண்டு 60 மில்லி அளவு தினம் 3 வேளை அருந்திவர வயிற்றுப்புண் ஆறி நெஞ்செரிவும் தீரும்.

❀ நாட்பட்ட பழையபூக்களை நெய்யிலிட்டு வதக்கி உப்பு, சுட்டபழம்புளி, வறுத்த மிளகாய், கறிவேப்பிலை அளவாகக் கூட்டி துவையல் செய்து சோற்றுடன் கலந்துண்ண நாவறட்சி, சுவையின்மை, வாந்தி, நீடித்த வாதநோய், வயிற்றுப்புழுக்கள் ஆகியவற்றை நீக்கும்.

❀ துவரம்பருப்பை வேகவைத்து வடித்த நீரில் மிளகுரசம் செய்வதுபோல செய்து பாகாக்கி இறக்கிய ரசத்தில் பூவை வறுத்து பொடித்து கலந்து கொடுக்க வாந்தி நீங்கி அஜீரணம் தீரும்.

❀ குடல்பகுதி சுத்தமாக புளி, அரைத்த மிளகு இவ்விரண்டையும் தண்ணீரில் கரைத்து பிழிந்து வடிகட்டி அதில் உப்பு சேர்த்து கொதிக்கவைக்க வேண்டும். நெய்விட்டு வெங்காயத்தை வறுத்து அதில் கூட்டிக் கலந்து குழம்புபோலாக்கி சோற்றுடன் கலந்து உட்கொண்டுவர குடல் சம்பந்தமான நோய்கள், குடல் நோய்கள் நீங்கி குடற்புழுக்கள் அழிந்து குடல் சுத்தமாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

குழந்தைகட்கு குடலில் பூச்சிகளை அழிக்க ஒருகைபிடியளவு வேப்பம்பூக்களை சுத்தம் செய்து 5 மிளகுகளைச் சேர்த்து மைபோல அரைத்து 2.5 கிராம் அளவு கொடுக்க குடற்பூச்சிகள் அழியும் 5 வயதிற்கு மேல் இதனைப் பயன்படுத்தலாம்.

100 வயதுடைய வேப்ப மரத்தின் இலை, பூ, பட்டை, வேர்பட்டை, காய் ஆகியவற்றை சம அளவில் எடுத்து உலர்த்தி, பொடித்து, அரித்து 2 தொடக்கம் 5 கிராம் அதை தேனில் காலையில் சாப்பிட்டுவர உடல்வலியும் வனப்பும் பெறும். உடலில் எந்த நோயும் அணுகாது. நீரிழிவு நோயும் குணமாகும். மரத்தில் 100 ஆண்டு வளையங்கள் இருத்தல் வேண்டும்.

# இராகுகாலம் கெடுதல் செய்யுமா?

## ஜோதிடக் களம்

"இராகு காலத்திலே போகாதே போகாதே என்று தலைக்குத் தலை அடித்தேனே, கேட்டியா? இப்படி காரியத்தைக் கெடுத்திட்டு வந்து நிக்கிறியே?" இவ்வாறு அங்கலாய்ப்பாள் ஓர் அம்மாள்.

திங்கட்கிழமை ஏழரை ஒன்பது இராகு காலம். ஒன்பது மணிக்கு மேலே வரனை அழைத்துக்கொண்டு வாறேன். ஏனென்றால் நாம் செய்வது நல்ல காரியம். கால நேரம் பார்த்து செய்யனும் என்று பேச்சுவார்த்தை நடத்துவார் ஒரு கல்யாணத் தரகர்.

எம்.எல்.ஏ.வைப் பார்த்து காலேஜ்க்கு சீட் பிடிக்கணும். இராகு காலத்துக்கு முன்னே புறப்பட்டவேணும்...ம் டிபன் ரெடியாச்சா? என்று தவியாய் தவிப்பார் ஒரு குடும்பஸ்தர்.

ஜோதிடத்திலே தீவிர நம்பிக்கையுள்ள சிலரோ இராகு காலத்திலே வெளியே தலை காட்டுவது கிடையாது.

ஏன் இப்படி இராகுகாலம் என்றால் பயந்து சாகிறார்கள்?

இராகு காலத்தில் போன காரியம் உருப்படாது. செய்த காரியம் சரிப்படாது. இப்படி ஒரு நம்பிக்கை நம்மவர்களிடையே அழுத்தமாக வேரூன்றி விட்டது. இந்த நம்பிக்கை சரிதானா?

இராகு காலம் பற்றி நிறைய பேர் கொண்டிருக்கும் தவறான அபிப்பிராயம் நீக்கவே இக்கட்டுரையை எழுதுகிறேன். கவனமாகப் படியுங்கள்.

இராகு ஓர் அசுப கிரகம் தான். ஒத்துக் கொள்கிறோம். ஆனால் எல்லோருக்குமா இராகு கெடுதல் செய்கிறது? அதுவே ஜாதக ரீதியாக சுப பலன் தரக்கூடிய விதத்தில் அமைவது இராஜயோக பலன்களை வாரி வழங்குவதும் உண்டல்லவா?

அதேபோல் சுபகிரகமான சுக்கிரன் கூடக் கெடுதலான ஆதிபத்தியம் ஏற்பதாலோ தீய ஸ்தானங்களில் அமர்ந்தோ வறுமையைக் கொடுத்து நடுத்தெருவில் நிறுத்துவதும் உண்டு என்பதை ஜோதிட அபிமானிகள் அறிவார்கள்.

எனவே இயற்கையில் சுபக்கிரகமானாலும் அசுபக்கிரகமானாலும் அது நன்மைகளைச் செய்யுமா என்பதை ஜாதக மூலம் தான் நிர்ணயிக்க வேண்டி இருக்கிறது.

இந்த நிலையில் இராகுகாலம் எல்லோருக்கும் கெடுதல் செய்யும் என்பது எப்படி சரியாக இருக்க முடியும்?

**இரவில் செய்தாலும் அரவில் செய்யாதே** என்ற பழமொழியையெல்லாம் பொதுக் கருத்தாகத் தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர தனிப்பட்ட முறையில் எல்லோருக்கும் பொருந்துவதாக ஒப்புக் கொள்ள முடியாது.

அநுபவம் இதைத் தான் சொல்கிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் 6 டிணிவரையிலும் திங்கட்கிழமை காலை 7.30 மணி முதல் 9 மணி வரையிலும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணி வரையிலும் புதன்கிழமை நண்பகல் 12 மணி முதல் 1.30 மணி வரையிலும் வியாழக்கிழமை பகல்1.30 மணி முதல் 3 மணி வரையிலும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணி முதல் 12 மணி வரையிலும் சனிக்கிழமை காலை 9 மணி முதல் 10.30 வரையிலும் இராகுகாலம் ஆகும். இதை எல்லாப் பஞ்சாங்கங்களிலும் கலண்டர்களிலும் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு நாளும் ஒன்றரை மணி நேரத்தை இராகு ஆட்சி செய்கிறது.

இந்த இராகு காலம் யாருக்கு நன்மை தரும் என்பதை பார்ப்போம்.

பன்னிரண்டு இராசிகளிலே விருச்சிக இராசி கீட இராசி என்றும் நச்சு இராசி என்றும் அழைக்கப்படுகிறது. இது விஷ இராசியானதால் விருச்சிக லக்கினத்தில் பிறந்தவர்களுக்கும் விருச்சிக இராசியில் பிறந்தவர்களுக்கும் விஷக்கடி கூட அவ்வளவாகப் பாதிப்பதில்லை என்ற அனுபவத்தில் அறிகிறோம். இராகு-கேதுக்களின் உச்ச வீடாக கருதப்படுவது இந்த விருச்சிக இராசி! (கேதுவின் உச்ச வீடென்றும் இராகுவின் நீச்ச வீடென்றும் வழங்கப்படுவதுண்டு)

இந்த விருச்சிகத்தை ஜென்ம லக்னமாகக் கொண்டவர்களுக்கும் இராகு காலம் கெடுதல் செய்வதில்லை.



விருச்சிக இராசி எனும் போது அதில் விசாக நட்சத்திரத்தின் முதல் மூன்று பாதங்கள் நீங்கலாக கடைசி 4 ஆம் பாதமும் அனுஷ நட்சத்திரத்தின் 4 பாதங்களும் கேட்டை நட்சத்திரத்தின் 4 பாதங்களும் அடங்கியிருக்கின்றன.

இந்த நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இராகு காலம் தீங்கு விளைவிப்பதில்லை.

அத்துடன் திருவாதிரை, சுவாதி, சதயம் ஆகிய நட்சத்திர காரர்களுக்கும் இராகு காலம் நல்ல காலமேயாகும்.

சூரியன் கார்த்திகை மாதம் முழுவதும் விருச்சிக இராசியிலேயே சஞ்சரிக்கிறார்.

எனவே விருச்சிக மாதம் என்று அழைக்கப்படும் கார்த்திகை மாதத்தில் பிறந்தவர்களுக்கும் இராகுகாலம் நன்மையே செய்கிறது.

இவை மட்டுமா? இராகு காலம் நன்மை தருவதற்குரிய வேறு அமைப்புகளும் உள்ளன. அவற்றையும் கவனியுங்கள்.

ஜனன ஜாதகத்தில் இராகு 2,4,6,7,8,12 ஆகிய ஸ்தானங்களிலும் பகை இராசிகளிலும் அமர்ந்திருந்தாலும் சூரியனுடனோ, சந்திரனுடனோ சம்பந்தப்பட்டிருந்தாலும் இராகு காலத்தால் அனுகூலமில்லை. இவர்கள் மட்டும் இராகு காலத்தில் நன் முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

ஆனால் ஜாதகத்தில் இராகு லக்கினம் 3,5,9,10,11 ஆகிய ஸ்தானங்களிலோ மேட, இடபம், கடகம், கன்னி, மகரம் ஆகிய இராசிகளிலோ அமர்ந்திருந்தாலும் இராகு காலத்தில் நன்மையுண்டு. மேற்கண்ட விதத்தில் இராகு அமைந்து இராகு திசை நடந்தாலும் இராகு புத்தி, இராகு அந்தரம் போன்றவை நடைபெற்றாலும் இராகுகாலத்தில் சிறப்பான நற்பலன்களை பெறலாம்.

இராகுகாலத்தில் தீமை பெறுவதாக அமைப்பு பெற்றவர்களும் மேற்கண்டபடி இராகுவின் அனுகூலம் பெற்றவர்களால் வெற்றியடைய இடமுண்டு. எப்படி என்கிறீர்களா?

இராகு காலத்தில் இராகுவின் அனுகூலம் பெற்றவர்களுக்காகவோ அவர்களின் உதவியைக் கொண்டு ஈடுபட்டாலோ அவர்களுடன் சேர்ந்து சென்றாலோ கெடுபலன்கள் குறைந்து நலம் விளைவதை அனுபவத்தில் அறியலாம்.

ஆகவே மேலே சொல்லப்பட்ட விதத்தில் லக்னம், இராசி,நட்சத்திரம், கிரக நிலைகள் அமையப் பெற்றவர்கள் இராகு காலத்தைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியமே இல்லை!

இராகு காலத்தில் அவர்களுக்கு கெடு பலன்கள் கொஞ்சமும் இல்லை என்பதுடன் மற்ற காலங்களை விட விசேடமான நற்பலன்களை அளிக்கும் என்பதால் இராகு காலத்திலேயே எந்தவித நன் முயற்சிகளிலும் ஈடுபட்டுப் பிரமாத வெற்றியடையலாம்.

# தேசிய மட்ட விளையாட்டு போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(மல்லாவி)

வடமாகாண கல்வி வலயத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ள துணுக்காய் கல்வி வலய வீர, வீராங்கனைகளின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கோலூன்றிப் பாய்தல்**

எஸ்.பரதன்(மு/மல்லாவி மத்திய கல்லூரி)

**ஈட்டி எறிதல்**

என்.கிருசாந்த் (யோகபுரம் மகா வித்தியாலயம்)

**5 ஆயிரம் மீற்றர் ஓட்டம்**

க.தேவராஜன் (மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை)

**400 மீற்றர் தடைதாண்டல்**

ஜெ.சிந்துஜா (மு/மல்லாவி மத்திய கல்லூரி)

**800 மீற்றர், 1500 மீற்றர் ஓட்டம்**

ஆர்.விஜயகுமாரி (மு/முத்தையன் கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை)

**400 மீற்றர் தடை தாண்டல்**

ரி.நிவேதா (மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம்.

**நீளம் பாய்தல்**

பி.சுகன்யா (மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை)

**100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டம்**

வி.டிலக்ஷணா (மு/மல்லாவி மத்திய கல்லூரி)

**100 மீற்றர் தடைதாண்டல்**

கே.றஜித்தா (மு/மல்லாவி மத்திய கல்லூரி)

**தட்டெறிதல்**

என்.மலர்மதி(மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை)

**400 மீற்றர் ஓட்டம், 800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம்**

எம்.சுகந்தி (மு/பாண்டியன் குளம் மகா வித்தியாலயம்)

மேற்படி போட்டியில் தெரிவாகிய மாணவர்களுக்கு தேசிய மட்டப் போட்டி கொழும்பு பண்டாரவளை நகரசபை மைதானத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-12-15)

# காணமல்போனோர் தொடர்பான ஐ.நா. சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட வேண்டும்

## ஐ.நா.சபையின் நடவடிக்கைக்குழு மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் கடந்த 30 வருடங்களில் 12 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ள நிலைமையில் இலங்கையில் சட்டவிரோதமாக காணாமல் போனோர் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சாசனத்தில் கைச்சாத்திட வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக்குழு இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் இலங்கை அரசு அதில் கலந்து கொள்ள மறுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


பல தடவைகள் ஐ.நா.நடவடிக்கை குழு இலங்கை வருவதற்கு அனுமதி கோரியிருந்த போதும் அவர்கள் இலங்கைக்குள் வர அனுமதி வழங்கப்படவில்லை.

அத்தோடு இலங்கையில் சட்டவிரோதமாக காணாமற் போவோரைக் கட்டுப்படுத்துமாறும் இலங்கைக்கு பல தடவைகள் கோரிக்கை விடுத்ததாக ஐ.நா. நடவடிக்கை குழு உறுப்பினர் மார்டிஸ் ஜோசு பொல்லாடோ தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையில் காணாமல் போனோர் தொடர்பாக 12 ஆயிரத்து 230 முறைப்பாடுகள் ஐக்கிய நாடுகளின் காணாமற்போனோர் நடவடிக்கைக்குழுவிடம் உள்ளதாகவும் அதில் 40 முறைப்பாடுகள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் 6 ஆயிரத்து 535 முறைப்பாடுகள் தொடர்பாக இலங்கை அரசு விசாரணை மேற்கொள்வதாக அறிவித்திருந்தது.

எனினும் 5 ஆயிரத்து 653 முறைப்பாடுகளில் எந்தவித தகவலும் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# மற்றொரு கோணம்



## மனதை, தெய்வீகத்தை அடைவதற்கான ஏணியாகவும் பயன்படுத்தலாம்

**ஆன்மீகம் 34**


**தொப்புட் கொடி அறுக்கப்பட்டதுமே நாம் ஒவ்வொருவரும் ஒருவகையில் அகதியென்றே தோன்றுகின்றது. உங்கள் கருத்து என்ன?**

உங்கள் அன்னையென்றும் தொப்புட் கொடியென்றும் நீங்கள் என்றும் அழைக்கப்படும் எல்லாமே இந்த மண்ணின் ஒரு பாகம்தான். மண்ணின் ஒரு துளிதான் மேலெழுந்து ஆடுகிறது. அதுவே பின்னால் உங்களை உள்ளே இழுத்துக் கொள்ளும். உங்களைப்பற்றி ஏதேதோ விசித்திரமான எண்ணங்கள் உங்களுக்குள் தோன்றுகின்றன. உங்களுக்கும் எனக்கும் முன்பாக இந்த மண்ணில் பல கோடிபேர் பிறந்து வளர்ந்தார்கள். அவர்களுக்கும் தங்களைக் குறித்து இப்படி எத்தனையோ விசித்திரமான எண்ணங்கள் தோன்றின. அவர்கள் எல்லாம் எங்கே போனார்கள். இந்தப் பூமியின் மேற்பரப்பில் புதைந்து கிடக்கிறார்கள். எல்லாமே அதே போலப் புதைந்து போகிறவர்கள் தான். ஒருவேளை எழுந்து விடுவார்களோ என்று அஞ்சினால் ஆழப்புதைத்து வைப்பார்கள். இதில் உங்களைக் குறித்து விசித்திரமான எண்ணங்கள் உங்களுக்குத் தோன்றுகின்றன. எல்லோரிடமும் இருந்தும். நீங்கள் தனித்திருப்பதாக எண்ணுகிறீர்கள். அதனாலேயே அகதியாகவும், அநாதையாகவும் உங்களைக் குறித்து உங்களுக்குத் தோன்றுகிறது. இப்படித்தோன்றுவதற்கு வாழ்வின் இயல்பு காரணமல்ல. எண்ணங்களின் இயல்புதான் காரணம். மனதை, தெய்வீகத்தைச் சென்றடைவதற்கான ஏணியாகவும் பயன்படுத்தலாம். அல்லது உங்களை இந்த சிறிய உடலுக்குள் சிறைப்பிடித்து வைக்கவும் பயன்படுத்தலாம். அப்படி சிறைபிடித்து வைப்பதால்தான் உங்களை அகதி என்று எண்ணிக் கொள்கிறீர்கள். இந்த உலகில் ராக்கெட்டுக்களை உருவாக்குகிறர்கள், இயந்திரங்களை உருவாக்குகிறார்கள், கார்களை உருவாக்குகிறார்கள்; ஆனால், மனிதர்களை உருவாக்கு வதில் யாரும் கவனம் செலுத்தவில்லை. இந்த உடல், மனம் ஆகிய கருவிகளை யார் கட்டுப்படுத்துகிறார்களோ, அவர்களை உருவாக்க முற்படுவதில்லை. அப்படி உருவாவதைத்தான் நான் ஆன்மீகம். என்று சொல்கிறேன். உடலையும் மனதையும் பயன்படுத்தி உயர்நிலைக்கு கொண்டு செல்ல தகுதியும் வாய்ப்பும் இருந்தால் கூட உயிரை அழிப்பதற்கு அவற்றைப் பயன்படுத்துகிறீர்கள். உங்களிடமுள்ள கருவிகளை உயிரை மேம்படுத்தப் பயன்படுத்துகிறீர்களா? உயிரை அழிக்கப் பயன்படுத்துகிறீர்களா என்பதுதான் கேள்வி. உயிரை அழிக்கப் பயன்படுத்துவதென்றால் நீங்கள் கொலை செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை. தன்னை அகதிபோல் கருதிக்கொள்வது உங்களை நீங்களே அழித்துக் கொள்வதுதான். மற்றைய உயிர்களை அழித்தாலாவது அவை உங்களைத் தடுக்கும். ஆனால், உங்களை நீங்களே அழித்துக் கொள்கையில் உங்களுக்கு நீங்களே எந்த எதிர்புணர்வும் காட்டுவதில்லை.

எனவே, இப்படித் தத்துவங்களையும் விசித்திரமான எண்ணங்களையும் சொல்வது அறிவாளிகள் போல் நடிப்பவர்கள் மத்தியில் போதை தரும் விடயமாக இருக்கலாம். ஆனால், அதன் மூலம் நன்மை விளையாது. உங்களையும் மற்ற உயிர்களையும் மேம்படுத்தும் விதமாக உங்கள் எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**சர்ச்சிலும், மசூதியிலும் எல்லா மதத்தினரும் செல்ல முடிகிற போது இந்துக் கோவில்கள் மட்டும் குறிப்பிட்டவர்கள் வசம் இருப்பது ஏன்?**

நீங்கள் ஒன்றைப்புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் இந்தத் தேசத்திலிருந்த அத்தனை பேரும் இந்துக்களாகவே இருந்தார்கள். அப்போது பிற நாடுகளிலிருந்து இங்கே வந்தவர்கள் கோவில்களில் இருக்கின்ற செல்வங்களை கொள்ளையடிக்கத்தான் வந்தார்கள். அவர்களுக்கு உள்ளே இருக்கின்ற இறைவனின் மீது கவனம் இல்லை. உண்டியலின் மீதுதான் கவனம் இருந்தது. ஆகவே, பிற மதங்களைச் சர்ந்தவர்கள் உள்ளே வரக்கூடாது என்பதாக ஒரு வழக்கம் எற்படுத்தப்பட்டது. காலப்போக்கில் பல விடயங்கள் மாற்றத்திற்கு உட்பட்டாலும் சில அடிப்படைப் பழக்கங்களை மாற்றாமலேயே வைத்திருக்கிறார்கள்... அதில் இதுவும் ஒன்று.



(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசு தேவ்**

# செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் பெண் மொழி

**05**

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
முன்னை நாள் ஆய்வாளர்
ஜப்பான்-கக்குசுயின் பல்கலைக்கழகம்

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

மொழிநடைப் பயன்பாட்டையும் சிறப்பியல்புகளையும் பற்றி நோக்கும் போது புலவர்கள் ஒரு பெண் மொழியை பயன்படுத்தியிருப்பது தெளிவாகத் தெரிகிறது. இதனை பின்வரும் விடயங்களில் நுணுகிப் பார்க்கலாம்.

**கூற்றுநிலை**

அகப்பாடல்கள் கூற்றுநிலைப் பாடல்களாகவே அமைந்துள்ளன. குறுந்தொகைப் பாடல்களில் பெண் பாற்புலவர்கள் பாடிய பாடல்கள் 51 பாடல்கள் உள்ளன. 12 பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர். இது பற்றிய விபரம் முன்னர் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. ஔவையார் எனும் புலவரே 15 பாடல்கள் பாடியுள்ளார். பாடல்கள் தலைவி, தலைவன், தோழி, செவிலி, பரத்தை, இற்பரத்தை என்போருடைய கூற்றுக்களாக அமைந்துள்ளன. 51 பாடல்களில் 5 பாடல்களே தலைவன் கூற்றாகக் காணப்படுகின்றன. தலைவி கூற்றாக 29 பாடல்கள் உள்ளன. நூற்தொகுப்பில் தலைவி கூற்றுப் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை இதன் மூலம் அறிய முடிகிறது. தலைவி தனது துன்பத்தை தோழியிடம் கூறுவதாக பாடல்கள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைத் தரலாம்.

"பூழ்க்காலன்ன செங்காலுந்தின்
ஊழ்ப்பாடு முதுகா யுழையினங்
கவரும்
அரும்பனி யச்சிரந் தீர்க்கும்
மருந்துபிறி தில்லையவள் மணந்த
மார்பே" (பாடல் 68)

குறம்பூழ்ப் பறவையின் காலைப் போன்ற செவ்வியங் காலையுடைய உழுந்தினது மிக முதிர்ந்த காய்களை மான் கூட்டம் தின்னுகின்ற பெறுதற்கரிய முன் பனிக்காலம் வந்துவிட்டது. ஆனால், அவளைப்பிரிந்து சென்ற தலைவன் இன்னும் வரவில்லை. தன்னுடைய பிரிவுத் துன்பத்தை தீர்க்கும் மருந்து 'என்னை மணந்த அவருடைய மார்புதான்' எனப்பெண் தனது தோழியிடம் கூறுகிறாள்.

தன்னுடைய பிரிவுத் துன்பத்தைத் தீர்க்கும் தலைவன் மார்பைப் பற்றி பெண் வெளிப்படையாக தோழியிடம் கூறுவது அவளுடைய உள்ளார்ந்த மொழிநடையாக வெளிப்பட்டுள்ளது. முன்னர் இத்தகைய துன்பம் தீர்த்த அனுபவத்தையும் கூற்று நிலையில் எடுத்துக் கூறுகிறாள். காலங்கண்டு துன்பமடைந்த பெண் தனது துன்பம் பற்றிப் பேசும் போது வெளிப்படையாகக் கூறும் பேச்சு நிலையை இப்பாடல் நன்கு புலப்படுத்தி யுள்ளது. ஒரு பெண் அனுபவிக்கும் அந்தரங்கமான துன்பத்தை இன்னொரு பெண்ணால்தான் உணர முடியம். எனவே அவள் பயன்படுத்தும் மொழிநடையும் சிறப்பான ஒன்றாக அமைந்துள்ளது.

**பொருளமைதி**

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் பாடற்பொருள் பெண்ணின் வாழ்வியல் பற்றியதாகவுள்ளது. குறுந்தொகையில் உள்ள 400 பாடல்களில் 51 பாடல்கள் சிறப்பாக இப்பண்பு கொண்டுள்ளன. ஒரு பெண்ணினுடைய வாழ்வில் தோழி, செவிலி, நற்றாய் என மூன்று பெண்கள் அக்கறை கொண்டிருந்த னர். இவர்களிடையே தலைவியைப் பற்றிய அக்கறை எவ்வாறிருந்தது என்பதை பெண்பாற் புலவர்கள் சிறப்பான தொரு பெண் மொழியிலே பதிவு செய்துள்ளனர். ஒருபெண் தன்னுடைய விருப்பத்திற்குரிய ஆணுடன் தமரைப் பிரிந்து சென்று விட்டாள். அதைப் பெண் மொழியில் ஔவை யார் ஒரு பாடலில் பதிவு செய்துள்ளார்.

"பறைபடப்பணில மார்ப்ப விறை
கொள்பு
தொன்மூ தாளத்துப் பொதியிற்
றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழிபோல
வாயாகின்றே தோழி யாய்கழற்
சேயிலை வெள்வேல் விடலை
யொடு
தொகுவளை முன்கை மடந்தை
நட்பே" (பாடல் 15)

ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து தாமே வாழ்க்கையைத் திட்டமிட்டு உடன்போக்கிலே சென்று விட்டனர். இச்செய்தியைப் பெண்ணின் தோழி மூலம் செவிலித்தாய் அறிகிறாள். அச் செய்தியைப் பெண்ணைப் பெற்றெடுத்த நற்றாயிடம் சொல்வதாக இப் பாடல் அமைந்துள்ளது. ஆணுடன் உடன்போக்கிலே சென்ற பெண்ணின் நட்பு நிலையைத் தாயிடம் கூறும்போது கோசருடைய நன்மொழியை போன்ற பெண்ணுடைய நட்பு நிலையும் உண்மை யென்பது வெளிப்படையாயிற்று என எடுத்துக் கூறுகிறாள். பெற்றோர் திருமணம் செய்து கொடுக்காவிட்டாலும் ஆணும் பெண்ணும் தம் நட்பு நிலையை உலகறியச் செய்து விட்டனர். ஒருத்திக்கு ஒருத்தன் என்ற அன்பு வாழ்வி யலை பெண் பேணிச் சென்றதை செவிலி நற்றாய்க்கு எடுத்துரைக்கின்றாள். பெண்ணின் ஒழுக்கும் பெண் மொழியால் எடுத்துரைப்புச் செய்யப்படுகின்றது. பொருள் அமைதியில் இப்பாடல் உடன் போக்கினை பெண்கள் சமூகம் எவ்வாறு ஏற்றுக் கொண்டது என்பதைக் காட்டுகிறது. பண்டை சமூக வழக்கத்தைபெண் ஏற்றுக்கொர்ளள வேண்டிய பக்குவத்தை ஔவையார் சிறப்பான பெண் மொழியழிலே பதிவு செய்துள்ளார். பெண்மொழி ஒருதாய்மை உணர்வுடன் இப்பாடலில் வெளிப்படுவதையும் புலப்படுத்தியுள்ளார்.

(தொடரும்)

# இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இந்தியா பாரியளவில் ஒத்துழைப்பு

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியாவின் உதவியினாலேயே யுத்தத்தை வெற்றியீட்ட முடிந்தது என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது படையினர் மேற்கொண்ட மனிதாபிமான மீட்புப் பணிகளுக்கு இந்தியா பாரியளவில் ஒத்துழைப்பு வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தென் மாகாணத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது கிளிநொச்சியைக் கைப்பற்றிய படையினர் எட்டு படையணிகளாக முல்லைத்தீவு நோக்கி நகர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரது குடும்பத்தினர் மற்றும் சிரேஷ்ட தலைவர்கள் ஆகியோரை விமானம் ஊடாக பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு சில நாடுகள் முனைப்புக் காட்டியதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அயல் நாடான இந்தியாவின் அளப்பரிய ஒத்துழைப்பினால் இந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. நாட்டில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்த இந்தியா பாரியளவிலான பங்களிப்பினை வழங்கியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, திறந்த பொருளாதாரக் கொள்கைகளை பின்பற்றியதனால் இலங்கை பாரிய பின்னடைவுகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# மடிக்கணனியில் ஆபாச படங்களை வைத்திருந்த மாணவருக்கு அபராதம்

(கொழும்பு)

மடிக்கணனியில் 287 ஆபாச படங்களை வைத்திருந்தமைக்காக சிங்கப்பூரிலுள்ள இலங்கை மாணவர் ஒருவருக்கு 2 ஆயிரம் சிங்கப்பூர் டொலர் அபராதம் விதிக்கப்பட்டதுடன் மற்றொருவருக்கு 20 ஆயிரம் டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

இவர் தனது முன்னாள் காதலியின் உடலை வெளிப்படுத்தும் படங்களை பேஸ்புக் இணையத்தில் வெளியிட்டு அப்பெண்ணை விபசாரி எனத் தெரிவித்திருந் ததாக ஸ்ரெய்ட் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அந்நடவடிக்கை சட்டத்தின் படி கிரிமினல் குற்றமாகும். (ஸ்ரீ-2)




★ 70- ரோமப் பேரரசின் இராணுவத் தளபதி டைட்டஸ் தலைமையில் ஜெருசலேமைக் கைப்பற்றியது.

★ 1539-குரு அங்காட் தேவ் சீக்கியர்களின் இரண்டாவது குருவானார்.

★ 1812-நெப்போலியன் ரஷ்யாவின் முதலாம் அலெக்சாண்டரின் படைகளை பரடீனோ என்ற கிராமத்தில் தோற்கடித்தான்.

★ 1821-வெனிசுவேலா, கொலம்பியா, பனாமா மற்றும் எக்குவாடோர் ஆகியவற்றை உள்ளடக்கிய கிரான் கொலம்பியாக் குடியரசு உருவானது.

★ 1822-பிரேசில், போர்த்துக்கல்லிடம் இருந்து விடுதலை அடைந்தது.

★ 1860-லேடி எல்ஜின் நீராவிக்கப்பல் மிச்சிகன் வாவியில் மூழ்கியதில் 400 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 1940-பிரித்தானிய மக்களை அச்சுறுத்தும் வகையில் ஜேர்மனியினர் லண்டன் நகரில் 300 தொன் கன வெடிக்குண்டுகளையும் 13 ஆயிரம் எரிகுண்டுகளையும் வீசினர். 57 நாட்கள் தொடர்ந்து குண்டு வீச்சு இடம்பெற்றது.

★ 1942-உக்ரேய்னில் 8 ஆயிரத்து 700 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொலைக்களத்திற்கு அனுப்பப்பட்டனர்.

★ 1950-ஸ்கொட்லாந்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்று இடிந்து விழ்ந்ததில் 13 பேர் கொல்லப்பட்டனர். 116 பேர் காப்பாற்றப்பட்டனர்.

★ 1953- நிக்கிட்டா குருசேவ் சோவியத் ஒன்றியத்தின் மத்திய குழுத் தலைவரானார்.

★ 1965- இந்திய எல்லைகளில் சீனா தனது படைகளைக் குவிக்கப் போவதாக அறிவித்தது.

★ 1977-பனாமா கால்வாய் தொடர்பாக பனாமாவுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது. 20 ஆம் நூற்றாண்டின் இறுதியில் பனாமா கால்வாயின் கட்டுப்பாட்டை பனாமாவுக்குக் கையளிப்பதாக அமெரிக்கா உறுதி தந்தது.

★ 1978-கொழும்பு இரத்மலானை விமான நிலையத்தில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

★ 1986-தென்னாபிரிக்காவின் அங்கிலிக்கன் திருச்சபையின் முதலாவது கறுப்பினத் தலைவராக டெஸ்மண்ட் டூட்டு நியமிக்கப்பட்டார்.

★ 1988- ஆப்கானிஸ்தானின் முதலாவது விண்வெளி வீரர் அப்துல் அஹாட் மொஹ்மண்ட் சோவியத்தின் சோயூஸ் விண்கலத்தில் பூமி திரும்பினார்.

★ 1999- எதென்சில் இடம்பெற்ற 5.9 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தினால் 143 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2004-சூறாவளி ஐவன் கிரனாடாவைத் தாக்கியதில் 39 பேர் கொல்லப்பட்டு 90 வீதமான கட்டடங்கள் சேதமாகின.

### பிறப்புக்கள்

★ 1533-முதலாவது எலிசபெத், இங்கிலாந்தின் அரசி (இ.1603)

★ 1913-அப்துல் காதர் லெப்பை, இலங்கை கவிஞர் (இ.1984)

★ 1953-மம்முட்டி, மலையாள நடிகர்

★ 1984-பர்வீஸ் மவுரூவ், இலங்கையின் துடுப்பாளர்

★ 1984-மலிங்க பண்டார, இலங்கையின் துடுப்பாளர்

### இறப்புக்கள்

★ 1949-எல்ரன் மாயோ, அவுஸ்திரேலிய உளவியலாளர் (பி.1880)

★ 1997-மொபுட்டு செசெ செக்கோ, சயீரின் குடியரசுத் தலைவர் (பி.1930)

### சிறப்பு நாள்

★ பிரேசில் - சுதந்திரதினம் (1822)

1998 - கூகுள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்ட தினம் இன்றாகும்

# சிறுபான்மை மக்களின் உரிமைகள் உரியவகையில் மதிக்கப்படுவதில்லை

## பேராயர் நோபட் அந்திராதி தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுபான்மை மக்களின் உரிமைகள் உரிய வகையில் மதிக்கப் படுவதில்லை என பேராயர் நோபட் அந்திராதி தெரிவித்துள்ளார்.

மூன்று தசாப்தமாக நீடித்து வந்த யுத்தம் நிறைவடைந்த போதிலும் பெரும்பான்மை மக்கள் சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதனை உணர்ந்து கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக பல்மொழி, பல்மத மற்றும் பல்கலாசார ரீதியான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப் பட வேண்டும் என்பதனை ஏற்றுக் கொள்ள தயக்கம் [illegible]ட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்[illegible]ர். கொழும்பில் நடைபெற்ற நிக[illegible]வு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால அனுபவங்களிலிருந்து நாம் பாடங்கள[illegible] கற்றுக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். மாற்றுக் கொள்கைகளுக்கு வரவேற்பளிக்கும் மனப்பாங்கு மருவி வருவதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

அரசியல்வாதிகள் சட்டம் ஒழுங்கை கையில் எடுத்துக் கொள்ள முயற்சிப்பதாகவும் இதற்கு இடமளிக்கப்படக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற சில அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சி

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற சில அரசசார்பற்ற நிறுவனங்கள் முயற்சி செய்து வருவதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 46 அரச சார்பற்ற நிறுவனங்களும் 262 நபர்களும் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் 95 வீதமானவை மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவை.


இந்த நிறுவனங்களுக்காக குரல் கொடுக்கும் உள்நாட்டு முகவர்கள் பற்றியும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக் குறித்த அரசசார்பற்ற நிறுவனங்களில் ஒன்று 200 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


(ஸ்ரீ-2)

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

காசி ஆனந்தனின் அதிரடித் தொடர் 6







## 1956 இல் பண்டா சொன்னார் வடக்கு,கிழக்கு தமிழர் தாயகம் என்று

'3500 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா முழுவதும் தமிழர்களே வந்தார்கள்' என்கிறார் பேரறிஞர் அம்பேத்கர். நீண்ட ஆய்வின்பின் இந்தியா பண்டைத் தமிழகமே என நிறுவினார் தமிழ் அறிஞர் பாவாணர்.

இந்திய வட நிலப்பரப்பில் வாழ்ந்த தமிழர்களின் தாய் மொழியாம் தமிழோடு கி.மு 1500இல் இந்தி, அசாமி, குஜராத்தி, பஞ்சாபி, வங்காளம், ஒரியா போன்ற வடதிராவிட மொழிகள் புதிதாகத் தோன்றின. வட திராவிடர்களாக தமிழர்கள் இனம் மாறினர்.

தெற்கில் ஆரியமொழிக் கலப்பினால் தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் போன்ற மொழிகளும் தென் திராவிட இனங்களும் தோன்றின.

இன்று 3500ஆண்டுகள் இடைவெளியின் பின்பு இந்தியாவில் தமிழின், தமிழினத்தின் நிலை என்ன? 30 மாநிலங்களில் 29 மாநிலங்கள் இன்று தமிழர் தாயகமாக இல்லை. ஒரேயொரு மாநிலம், தமிழ்நாடு மட்டுமே. தமிழர் தாயகமாய் தேய்ந்து சுருங்கி இழிவுற்றுக் கிடக்கிறது. தமிழீழத்திலும் இதுதான் நிலை. 25,000 சதுர மைல் 1200 ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் தாயகமாக்வே இருந்தது.

1799இல் பிரிட்டிஷ் உயர் அதிகாரி சர்ஹியூக்ளிர்கன் 'இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு நிலப்பரப்பைத் தமிழர்கள் தங்கள் சொந்த மண்ணாகக் கொண்டு வாழ்ந்தார்கள்' என்று குறிப்பிடுகிறார். 1933 இல் பிரிட்டிஷ் அரசு இலங்கைக்கு அனுப்பிய கோல்புறூக் ஆணைக்குழு தமிழீழம் (வடக்கு, கிழக்கு) தனி நாடாக இருந்தது என்றே தன் அறிக்கையில் பதிவு செய்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தொடங்கிய இலங்கையின் முன்னாள் தலைமை அமைச்சர் பண்டாரநாயக்கா, 1956 இல் 'இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தமிழர் தாயகமேயாகும்' என்று அறிக்கை வெளியிட்டார்.

இலங்கையில் வாழ்ந்த தமிழ் மொழியோடு, பிற்காலத்தில் புத்த மதத்தினர் கொண்டுவந்த பாளியும் வந்தவர்கள் வாயில் இருந்த வடமொழியும் கலந்து கி.பி.800இல் சிங்கள மொழியின் சிங்கள இனத்தின் தோற்றம் பெருகி, இலங்கைத்தீவில் ஐந்தில் இரண்டு பகுதி நிலப்பரப்பு தமிழீழமாய் தேய்ந்து போயிற்று.

இந்தியாவில் 30 மாநிலங்களில் 29 மாநிலங்களை இழந்தோம். இலங்கைத்தீவில் ஐந்தில் மூன்று பகுதி நிலப்பரப்பை இழந்தோம்.

ஆங்கில மொழியும் ஆங்கில இனமும் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகச் சொல்கிறார்கள்.1500ஆண்டுகள் இடைவெளியில் சின்னஞ்சிறிய இங்கிலாந்தில் தோன்றிய ஆங்கிலேயன் அமெரிக்காவை, கனடாவை, அலெஸ்காவை, அவுஸ்திரேலியாவை, நியூசிலாந்தை தன் அகண்ட தாயகங்களாய் விரிவு படுத்தினான். ஆனால் 50,000 ஆண்டுகளுக்கு முந்திப் பிறந்ததாகப் பாவாணர் குறிப்பிடும் தமிழோடு பிறந்த தமிழினம் 50,000 ஆண்டுகள் இடைவெளியில் அடைந்த வளர்ச்சி என்ன? நம் அகண்ட தாயகங்களான இந்தியாவிலும் இலங்கைத்தீவிலும் நமக்கிருந்த சொந்த நிலப்பரப்பையும் இழந்து சுருங்கி அழிவின் விளிம்பில் நிற்கிறோமே! இது தமிழினத்தின் வீழ்ச்சியா? இல்லையா?

தமிழ்நாட்டில் தாய்மொழியை மேலை ஆரியமொழியான ஆங்கிலம் கலந்து அழித்துக் கொண்டிருக்கிறோம். தமிழீழத்தில், சிங்களக் குடியேற்றத்தால் தொலைத்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்மொழியோடு ஆங்கிலம் கலந்து பேசுகிறவர்கள் தமிழர்களே என்பதால் அவர்களைத் திருத்தி தமிழ்நாட்டின் தேசிய இனத்தன்மை காத்தல் இயலும் - முடியும். ஆனால், தமிழீழத்தின் சிங்கள இனவெறியர்களின் திட்டமிட்ட குடியேற்றத்தால் நமது தாயகம் பறிக்கப்படுவதால் தமிழீழத்தின் தேசிய இனத்தன்மை காத்தல் அங்கே பெரும் போராட்டமாக இருக்கிறது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட முத்தமிழ் நாடுகளில் ஒன்றான பச்சைப் பசேலென்ற சேர நாட்டை (கேரளா) 600 ஆண்டுகளுக்கு முன்புதான் இழந்தோம். இப்போது, ஈழ நாட்டையும் நாம் இழப்பதானால் அது தமிழர் வரலாற்றில் ஈடிணையற்ற இன்னொரு பேரிழப்பாகவே அமையும்.


எனவேதான் அழிவின் விளிம்பில் இருக்கும் தமிழர்களின் இரு தாயகங்களில் ஒன்றான தமிழீழம் காத்தல், தமிழினத்தின் முதல் கடமை என அனைத்துத் திசைகளும் பறை முழக்கங்கள்.

எரிமலை வெடிக்கும் இலங்கையின் இன்றைய நிலை என்ன?

(பொறி பறக்கும்)

இருப்பாய் தமிழா நெருப்பாய்... என்ற தொடர், சீமானைத் தொடர்ந்து கவிஞர் காசி ஆனந்தனினால் எழுதப்படுகின்றது. (ஆ-ர்)

# நவீன எண் சோதிடம்




## ஒரு குழந்தையைப் போன்று எல்லோரிடத்திலும் பழகும் இயல்பினர்

39

## புதன் பொதுப்பலன்

புதன், ஆங்கிலத்தில் மெர்க்குரி என்று அழைக்கப்படுகின்றது. மெர்க்குரி விளக்கு எரிய ஆரம்பிக்கும் போது சுமாரான வெளிச்சத்தையும், நேரமாக நேரமாக அதிக பிரகாசத்தையும் கொடுப்பது போல் இந்த ஆதிக்கக்காரர்கள் வயது ஏற ஏற மிகுந்த பாக்கியசாலியாகவும், பல்வேறு வழிகளில் சிறப்புற்றும் விளங்குவர்.

ஒவ்வொரு மாதமும் வருகின்ற 5,14,23தேதிகளில் பிறந்த அனைவரும் புதன் ஆதிக்கத்தில் பிறந்தவர்களே. இவர்கள் மிகுந்த சுறுசுறுப்பும் திடமாக எக்காரியங்களிலும் இறங்கி வெற்றி பெறும் தன்னம்பிக்கையும் கொண்டு விளங்குவர். 4 எண்காரர்களைப் போல் தேவையற்ற விடயங்களில் இறங்கி மாட்டிக் கொள்ளாது எப்பொழுதும் எச்சரிக்கையாகத் தன்னை உயர்த்தும் வழிகளில் செல்வர். இவர்களை யாரும் புரிந்து கொள்ளமுடியாது. பேச வேண்டிய இடத்தில் அதிகம் கவர்ச்சியாகப்பேசி அமைதியாக இருக்க வேண்டிய இடத்தில் அமைதியாக இருந்து, காரியம் சாதிப்பதில் சமர்த்தர்.

எந்தக் காரியத்தையும் உடனே செய்து முடிக்க வேண்டுமென்ற கொள்கை கொண்டவர். இவர்களுக்கு மின்சார வேகத்தில் சிந்தனை செல்லும். பிறர் செய்ய முடியாத காரியங்களை நாம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். எல்லோரிடமும் குழந்தை போன்று பழகும் இவர்கள் மனதில் உள்ளதை மறைக்காமல் கூறுவது போல் நடிப்பர். பிறரைக் கவர்வதில் கை தேர்ந்தவர்கள். ஆபரணம், ஆடம்பரப் பொருள், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றில் அதிக நாட்டம் உடையவர்களாக இருப்பர். இவர்களில் 5 வகையானவர்களைப் பார்ப்போம்.

■ ■ ■

## உடல் எண் 5 உயிர் எண் 1

5,14,23 போன்ற தேதியில் பிறந்து, தேதி,மாதம்,வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 1 வருமேயானால் இவர்கள் புதன், சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாகக் காட்சியளுக்கும் இவர்கள், தான் செய்கின்ற வேலையை விரைவில் முடிக்க வேண்டுமென்று ஓடோடி உழைப்பர். புதிது புதிதாக திட்டத்தை வகுத்துக் கொண்டு அதை இயக்க முற்படுவர்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

இவர்களது யோசனையும், புத்தியும் மின்னல் போன்ற வேகமுடையது. தான் செய்கின்ற காரியம் தாமதம் ஆனால், அதற்கு காரணம், உடன் இருப்பவர் என்று கூறுவர். இவர்களுக்கு பெயர், பிறந்த தேதி எண்களுக்கு பொருத்தமானதாக அமையுமேயானால் உத்தியோகம், தொழில், வீடு, வாகனம், நிலம் போன்ற அமைப்புகளைப் பெற்றுச் சிறப்பாக வாழ்வர். இந்த எண்ணிக் கையில் பிறக்கும் சிலர் உத்தியோகஸ்தர்களாகவும், பலர் தொழில் செய்பவர்களாகவும் இருக்கின்றனர். இவர்களில் பலர் பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும் கவர்ச்சியான தோற்றத்துடனும் காட்சியளிப்பர். தான் எண்ணுகின்ற காரியங்களைச் செயற்படுத்துவதற்கு முன் பிறரிடம் சொல்ல மனம் கூசுவர். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் வெற்றியளிக்கும் என்ற கொள்கையுடையவர்.

தான்செய்கின்ற பயணத்தைப் பிறரிடம் கூறமாட்டார். இவர்கள் நினைத்ததை முடிக்க வேண்டும்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

என்று இயங்குவதால் மனம் ஒரு நிலையாகவே முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் மட்டும் அதிகம் சம்பாதித்து தீய வழியில் செலவு செய்வர். சிலர் பணமீட்டுவதற்கு வாய்ப்பு இருந்தும் அதை இழந்து வருந்துவர். ஆனால், பெயர் நன்றாக அமையுமேயானால், தொழில், உத்தியோகம், நல்ல வாழ்கைத்துணை, நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் நிறைந்த செல்வம் பெற்று நலமாக வாழ்வர். இந்த ஆதிக்கத்தில் பிறந்த சிலர் உத்தியோகம் பார்த்தாலும் அவர்கள் மனம் சதா தொழில் மூலம் அதிக பணம் ஈட்ட வேண்டும் என்று திட்டம் தீட்டிக்கொண்டே இருக்கும்.

நிலையில்லாத காதல் மனம் கொண்ட இவர்கள் ஆண்டவனை வழிபடுவது சிறிது வேடிக்கையாக இருக்கும். தான் தொடுத்த காரியங்கள் முடியாவிட்டால் கடவுளை வெறுப்பர். முன்னோர்கள் சொத்துக்கள் மூலம் முன்னேறாது தன் சொந்த முயற்சியால் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைவர். தர்ம சிந்தனை கொண்ட இவர்கள் தர்மம் செய்வதிலும் மனத்திருப்தி அடைவர். ஏழ்மையைப் போக்குவதிலும், ஏழைக் குழந்தைகளுக்கு உதவுவதிலும் ஆர்வம் உள்ளவர்கள். இயற்கைக் காட்சிகளை ரசிப்பதிலும் நீர்வீழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதிலும் மிகுந்த மன அமைதியைப் பெறுவர் கலையை ரசிப்பதில் ஆர்வம் கொண்ட இவர்கள் நிரந்தரமான இரசிகர் அல்ல. நேர்மை, நீதி, போன்றவற்றைப் பின்பற்றும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையா விட்டால் தீய வழியில் மனம் இழுத்துச் செல்லும். இதனால் பெயர் நன்றாக அமைய வேண்டியது மிக முக்கியம். பெயர் நன்றாக அமைந்தவர்கள் எல்லா வளமும் பெற்று சிறப்பாக இருப்பர்.

**தொழில்**

இவர்களுக்கு கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்ஸி, நெருப்பு, இரும்பு சம்பந்தமான தொழில் அனைத்தும் சிறந்த இலாபத்தைத் தரும்.

**நோய்**

உஷ்ணம் சம்பந்தமான அனைத்து நோய்களும் வந்து நீங்கும். இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, நரம்புத்தளர்ச்சி போன்றவைகள் வரவாய்ப்பு இருப்பதால், முன் கூட்டியே தவிர்க்க முயல்வதோடு கோபத்தைக் குறைத்துக் கொள்வது நலம்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு புதன், சூரியன் ஆதிக்கம் இருப்பதால் மேற்குறிப்பிட்ட ஆதிக்க எண்ணாகிய 14, 23,32,41,50,59,77,19,37,46,64 போன்றவைகளில் பெயரை அமைத்துக் கொண்டால் சிறப்பாக வாழலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்- 5,1

யோகமான தேதிகள்- 5,14,23, 1,10,19,28,6,15,24

யோகமான மோதிரக்கல்- வைரம், ஜிர்கான், கனக புஸ்பராகம்.

யோகமான நிறம்-சாம்பல் நிறம், மஞ்சள், வெளிர் நீலம்

ஆகாத நிறம்- கறுப்பு


ஆகாத தேதிகள்- இல்லை.

* * *

## பெயர் எண்களின் பலன்

**14 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்கள் வியாபாரம் செய்தால் நல்ல முன்னேற்றம் அடையலாம். இவர்களுக்கு நண்பர்கள் கூட்டம் உண்டு. பல்வேறு தொழில்களில் உள்ள நண்பர்களின் தொடர்பு உண்டு. சில நேரங்களில் பெரிதாக ஆசைப்பட்டு பொருள் இழப்பதும் உண்டு. காதல் விவகாரங்களில் தலையிடாதிருந்தால் நல்ல முன்




னேற்றத்தை அடையலாம். எப்பொழுதும் இவர்களுக்கு உதவி செய்ய பலர் முன்வருவர். இவர்களை யோகக்காரர்கள் என்று சொல்லலாம்.

**15 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் உலகிலுள்ள அனைத்துச் சுகநலன்களையும் அனுபவிக்கப் பிறந்தவர்கள். தன்னுடைய வெற்றிக்கும் தனது இலட்சியத்திற்கும் உழைத்த வண்ணமே இருப்பர். பேச்சாற்றலும், கவர்ச்சியான நடையுடையும் கொண்ட இவர்கள் பல்வேறு தொழிலால் ஏராளமான பொருட்களைச் சேர்ப்பர். இவர்களுக்கு எப்பொழுதும் மணற்கேணி நீரூற்றுப் போல் பணம் சேரும். பிறந்த தேதி எண்கள் பொருத்தமின்றி 3,12, 21,30 இல் அமைந்து விட்டால் தீயவழியில் பணம் சம்பாதித்து தீயவழியில் செலவு செய்வர்.

(தொடரும்)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள தமது 100 நாட்கள் கொண்ட வேலைத் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிப்பதைப் படத்தில் காணலாம்.

# அவயவங்களை இழந்தோருக்கு முற்றிலும் இலவசமாக அவயவங்கள்

(கிளிநொச்சி)

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் இந்திய ஜெய்ப்பூர் நிறுவனத்தினால் இன்றும் நாளையும் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையூடாக அவயவங்கள் இழந்தோருக்கு (கை, கால்) செயற்கை அவயவங்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப் படவுள்ளன.

அத்தோடு செயற்கை கை, கால் தேவைப் படுவோருக்கு கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் உணவு போன்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு யாழ்ப்பாணம் அழைத்து செல்லப்படவுள்ளனர்.

இதில் கால், கை இழந்தவர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறலாமென கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# செல்வபுரம் மக்களுக்கான வீடுகளை இன்று அமைச்சர் பசில் கையளிப்பார்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று உதவி அரசாங்கப் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராம சேவையாளர் பிரிவில் போரினால் வீடுகளை இழந்த மக்களுக்காக கரித்தாஸ்-கியூடெக்- வன்னி நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 95 புதிய வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 10 மணியளவில் புனித யூதாதேயு ஆலய முன்றலில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக பொருளாதார சமூக அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, சிறப்பு விருந்தினர்களாக அதி வணக்கத்திற்குரிய யோசவ் ஸ்பின்ரறி (குருதினார்), நோர்வே தூதுவர் திருமதி கில்டே கரால் டேற்றா, யாழ்.ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம், அதிவணக்கத்திற்குரிய கரல்ட் அன்ரனி பெரேரா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் விசேட விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, சேலர் பி.ரி. எப்.எஸ்.பி.தேவரட்ணம், இலங்கை கரித்தாஸ் தேசிய இயக்குநர் அருட்திரு ஜோர்ஜ் சிகாமணி, யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் அருட்திரு பேனாட் றெக்னோ, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஏ.பத்திநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு யுத்தத்தின் பின்னரான ஒரு வருட காலத்தில் இவர்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டத்தில் மீன்பிடி வள்ளம் உட்பட கடற்றொழில் உபகரணங்களும் இம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-12)

## சிறுமி துஷ்பிரயோகம்

# குற்றப்புலனாய்வு அதிகாரியை கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு

சிறுமியொருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கின் சாட்சியாளருக்கு அழுத்தம் கொடுத்த குற்றச்சாட்டுக்கு அமைய கெப்பிற்றிக் கொல்லாவ பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வு பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியை உடனடியாக கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான,வழக்கு கெப்பிற்றிக் கொல்லாவ நீதவானும் மாவட்ட நீதிபதியுமான திலினி கமகே முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.

சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்தி விரைவில் நீதிமன்றத்தில் விடயங்களை தெளிவுபடுத்துமாறு நீதிமன்றம் வடமத்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டது.

கெப்பிற்றிக் கொல்லாவ பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்ட சிறுமியிடம் பலவந்தமாக கடிதம் ஒன்றை பெற்றுக் கொள்ள முயற்சித்ததாக முறைப்பாட்டாளர் தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சந்தேகநபர்களும் அதில் தொடர்புபட்டிருக்கவில்லை என குறித்த கடிதத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்ததாக முறைப்பாட்டாளர் தரப்பால் நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

குறித்த கடிதத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததுடன் அது தொடர்பிலான விடயங்களை ஆராய்ந்து பார்த்து கெப்பிற்றிக் கொல்லாவ பொலிஸ் நிலையத்தின் குற்றப்புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரியை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-2)

# நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த புலி ஆதரவு அமைப்புகள் முயற்சி

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்கள் இலங்கையின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சி செய்து வருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்களும் சிவில் அமைப்புக்களும் இந்த விடயம் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய விசேட சொற்பொழிவின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நிதிச் சந்தைகள் மற்றும் தேசிய பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கில் தீவிரவாத அமைப்புக்கள் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். சட்டவிரோத நிதிக் கொடுக்கல்- வாங்கல்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலக அளவில் சட்டவிரோத நிதிக் கொடுக்கல்- வாங்கல் சம்பவங்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளதாகவும் மூன்றாம் நாடொன்றைப் பயன்படுத்தி தீவிரவாதிகள் நிதிக் கொடுக்கல்- வாங்கல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகா சிகிச்சைபெற நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா இரண்டு வாரங்கள் வைத்தியசாலையில் தங்கி விசேட வைத்திய நிபுணர் வஜிர தென்னக்கோனிடம் சிகிச்சை பெற நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவர் அடங்கிய நீதிபதிகள் குழு வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் சுகவீனத்திற்கு இரண்டுவார கால சிகிச்சை வழங்க வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் வஜிர தென்னக்கோன் பரிந்துரைத்துள்ளதாக வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர் எழுத்துமூலம் சமர்ப்பித்த கோரிக்கையை ஆராய்ந்த நீதிபதிகள் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

(ஸ்ரீ-2)


ஓராண்டு நினைவுகளோடு...!

அமரர் திருமதி வேலாயுதம் அன்னம்மா

மலர்வு 10 08 1934

உதிர்வு 07 09 2010



துன்பமென்ற சொல்லை நாம் கண்டதில்லை அம்மா!
நீங்கள் போனதால் வாழ்க்கையே துன்பமாகியதே!
வசந்தமாய் நறுமணம் வீசிய உங்கள் மனை
பசுந்தரை போல் இருந்த மனை உங்களைக்
காணாமல் பூக்கும் பூக்கள் நறுமணம் வீசவில்லை பாலைவனமானதம்மா!
உங்கள் இனிய வார்த்தைகளை தேடுகிறோம்!
புன்னகைத்த முகத்தோடு வாசலில் கர்த்திருப்பீர்கள்
பேரோடும் புகழோடும் வாழ வைத்தீர்கள்
வாழும் பிள்ளைகளை ஆனந்தமாக ஆதரித்து காத்தீர்கள்
ஒருவருடமாக எங்கள் கண்களோ ஓயவில்லை
பயணக் களைப்போ ஆறவில்லை வாசலோ
இருளானதம்மா நாம் பசித்திருந்தால் உங்கள் வயிறு பசிக்காதே அம்மா!
மரணப் படுக்கையிலும் எங்கள் முகம் வாடாமல் பார்த்தீர்களே!
வாடாத மலராய் வாடவிடாமல் காத்தோமே அம்மா...
எங்கு சென்றாலும் எமை அழைப்பீரே அம்மா
சொர்க்க வாசல் செல்லும் போது தனியாக ஏனம்மா சென்றீர்கள்?
காதோரம் வழியும் கண்ணீர் இன்று வரை என்றும் ஓயாதம்மா...

வேலாயுதம் குடும்பத்தினர்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப் பிள்ளைகள்.

(60440)

# சோமாலியாவில் வரலாறு காணாத பஞ்சம் ஏழரை இலட்சம் பேர் சாவின் விளிம்பில்

## ஐ.நா.அறிக்கை



(நியூயோர்க்)

ஆபிரிக்காவின் சோமாலியாவில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பஞ்சத்தால் ஏழரை இலட்சம் பேர் சாவின் விளிம்பில் உள்ளனர். 40 இலட்சம் மக்கள் உலக நாடுகளின் உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஆபிரிக்காவின் கிழக்குப் பகுதியில் உள்ள எதியோப்பியா, சோமாலியா மற்றும் கென்யா ஆகிய மூன்று நாடுகளில் வரலாறு காணாத பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இவற்றில் சோமாலியாவில் 1991 இல் இருந்து நிலையான அரசியல் சூழல் இல்லை. நாட்டின் பெரும்பான்மையான தெற்குப்பகுதி அல்ஷபாப் பயங்கரவாத அமைப்பிடம் சிக்கியுள்ளது.

இந்நிலையில் ஐ.நா.வின் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து உணவு ஆராய்ச்சிக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இது குறித்து கூறப்பட்டிருப்பதாவது,

சோமாலியாவில் மொத்தம் 40 இலட்சம் பேர் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உடனடியாக உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றன.

பஞ்சம் நீடிக்கும் பட்சத்தில் இன்னும் சில மாதங்களில் ஏழரை இலட்சம் பேர் இறந்து விடுவார்கள். ஏற்கனவே ஆயிரக்கணக்கான குழந்தைகள் பட்டினியால் இறந்துவிட்டனர்.

இந்த 40 இலட்சம் பேரில் 30 இலட்சம் பேர் நாட்டின் தென்பகுதியில் தான் உள்ளனர். ஒட்டுமொத்தமாக கிழக்கு ஆபிரிக்காவில் மட்டும் ஒரு கோடியே 20 இலட்சம் மக்களுக்கு உணவு தேவைப்படுகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இவ்வாண்டு மழையே இல்லாததால் சோமாலியா, எதியோப்பியா கென்யா ஆகிய நாடுகள் பஞ்சத்தால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இவற்றோடு ஜிபவுட்டி, எரித்திரியா மற்றும் உகண்டா நாடுகளிலும் மழையின்மையால் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# இந்தியக்கப்பல் சீனக்கப்பலால் வழிமறிக்கப்படவில்லை

## சீனா தெரிவிப்பு

(பீஜிங்)

வியட்நாம் துறைமுகம் அருகில் இந்தியக் கப்பல் சீனக் கப்பலால் வழி மறிக்கப்பட்ட செய்தியை சீனா மறுத்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 22 ஆம் திகதி வியட்நாம் துறைமுகத்திற்கு சென்று கொண்டிருந்த இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஐராவத் என்ற கப்பலை சீனப் போர்க் கப்பல், வழிமறித்ததாக தகவல்கள் வெளியாகின.

இதை முதலில் இந்தியா மறுத்தது. இதையடுத்து நேற்று முன்தினம் சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜியாங் யு வெளியிட்ட அறிக்கையில்,

இந்திய இராணுவத்தால் மறுக்கப்பட்ட இத்தகவல் ஆதாரமற்றது. இதுபோன்ற தகவல்களை ஊடகங்கள் வெளியிடும் போது சம்பந்தப்பட்ட அரசுகளுடன் ஆலோசித்து உறுதி செய்து பின் வெளியிட வேண்டும் என்றார். (ஸ்ரீ-4)

# கடாபியைக் காப்பாற்ற சீனா முயற்சித்தது

(டிரிபோலி)



கடாபி ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவருக்கு 20 கோடி டொலர் மதிப்பிலான ஆயுதங்கள் கொடுத்து காப்பாற்ற சீனா முயன்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

லிபியா இடைக்கால அரசுக்கு உதவிகள் வழங்கும் 63 நாடுகள் கூட்டமைப்பில் சீனாவும் இணைந்துள்ள தருணத்தில் இத்தகவல்கள், இரு தரப்பு உறவுகளிலும் நெருடல் ஏற்படுத்தும் வகையில் வெளிவந்துள்ளன.

எதிர்ப்பாளர்களை வீழ்த்த கடாபி போராடிக் கொண்டிருந்த நேரத்தில் கடந்த ஜூலை மத்தியில் பீஜிங் சென்ற கடாபியின் பிரதிநிதிகள், சீனா நோர்த் இண்டஸ்ட்ரீஸ் கோர்ப்பரேஷன், சீனா நேஷன் பிரிசிஷன் மெஷின் இம்போர்ட் அண்டு எக்ஸ்போர்ட் கோர்ப்பரேஷன், சீனா ஷிங்ஜிங் இம்போர்ட் அண்டு கோர்ப்பரேஷன் ஆகிய சீன அரசு இராணுவத் தளபாடங்கள் உற்பத்தி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

ரொக்கெட் லோஞ்சர்கள், பீரங்கிகளைத் தகர்க்கும் ஏவுகணைகள் தரையில் இருந்து வானில் உள்ள இலக்கை தாக்கும் ஏவுகணைகள் ஆகிய 20 கோடி டொலர் மதிப்பிலான ஆயுதங்கள் இவர்களின் பேச்சுவார்த்தையில் பட்டியலிடப்பட்டன.

அதேநேரம் இந்தப் பட்டியலில் உள்ள பெரும்பான்மையான ஆயுதங்கள், அல்ஜீரிய இராணுவக் கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் அங்கிருந்து லிபியாவுக்கு எளிதில் அனுப்ப முடியும் எனவும் அந் நிறுவனங்கள் தெரிவித்தன.

சில ஆயுதங்கள் தென்ஆபிரிக்கா, அல்ஜீரியா மூலம் கடல் வழியாக லிபியாவுக்கு அனுப்பவும் அந்நிறுவனங்கள் சம்மதித்துள்ளன. அக்காலகட்டத்தில் லிபியா மீது ஐ.நா. ஆயுதப் பரிமாற்றத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

இத்தகவல் கடாபியின் உளவுத்துறை அலுவலகத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆவணம் ஒன்றின் மூலம் தெரிய வந்துள்ளதாக கனடாவில் இருந்து வெளிவரும் தி க்ளொப் அண்டு மெயில் பத்திரிகை தெரிவித்துள்ளது.

சீனா, தென்ஆபிரிக்கா, அல்ஜீரியா, ரஷ்யா நாடுகள் தான் லிபியாவில் நேட்டோ படைகளின் தாக்குதலை எதிர்த்தன.

இவற்றில் ரஷ்யா தவிர பிற மூன்று நாடுகளும் இன்னும் லிபியா இடைக்கால அரசை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## பாகிஸ்தானில் கனமழை

# வெள்ளப்பெருக்கில் சிக்கி 88 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 88 பேர் பலியாகினர். 80 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இது குறித்து பாகிஸ்தான் தேசிய பேரிடர் மேலாண் ஆணையத்தின் தலைவர் ஜாகர் இக்பால் காதிர் கூறுகையில்,

தெற்கு சிந்து மாகாணம் மற்றும் கிழக்கு பஞ்சாப் மாகாணத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பெரும் பகுதிகள் நீரில் மூழ்கின.

வெள்ளத்தில் சிக்கி 88 பேர் பலியாகினர். மேலும் பலர் வீடுகளை இழந்துள்ளனர். இதையடுத்து பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு அதில் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு உணவு உட்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் இராணுவம், விமானப்படை மற்றும் ஐ.நா. குழுவினர் போர்க்கால அடிப்படையில் தீவிர மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தண்ணீர் நிரம்பி கிடப்பதால் மலேரியா போன்ற நோய்களில் இருந்து முன்கூட்டியே மக்களை பாதுகாக்க விழிப்புணர்வு பிரசாரம் தொடங்கப்பட்டுள்ளது என்று ஜாபர் தெரிவித்தார்.

ஆயினும் இப்பகுதியில் மழை தொடர்ந்து பெய்ய வாய்ப்பு உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# கேத் மிடில்டனின் திருமண ஆடையை பார்ப்பதற்காக குவியும் மக்கள்



(லண்டன்)

பிரிட்டிஷ் இளவரசி கேத் மிடில்டனின் திருமண ஆடையைக் காண லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு ஏராளமான பார்வையாளர்கள் வந்த வண்ணம் உள்ளனர்.

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸுக்கும் கேத் மிடில்டனுக்கும் கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி திருமணம் நடந்தது. இந்தத் திருமணத்தின் போது கேத் மிடில்டன் அணிந்திருந்த ஆடை பலத்த வரவேற்பை பெற்றுள்ளது. வில்லியம்ஸ்-மிடில்டன் திருமணக்கோலத்திலுள்ள பொம்மைகளும் லண்டனில் அதிக அளவில் விற்பனையாகி வருகின்றன. இந்த நிலையில் பக்கிங்ஹாம் அரண்மனையில் வைக்கப்பட்டுள்ள மிடில்டன் அணிந்திருந்த ஆடையை பொதுமக்கள் காண்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஜூலை 23 ஆம் திகதி முதல் 3.54 பேர் பங்கிங்ஹாம் அரண்மனைக்கு வந்து மிடில்டன் அணிந்திருந்த திருமண ஆடையை பொதுமக்கள் பார்த்து ரசித்துள்ளனர். (ஸ்ரீ-4)








இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேமில் நடந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த பெல்ஜியம் பிரதமர் இவெஸ் லிடர்மியை (வலது ) அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அவிக்டோர் லெய்பிர்மெர் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# விடுதலைப்புலிகள் விடயத்தில் கருணாநிதி சாதுரியமான போக்கை கையாண்டார்

## விக்கிலீக்ஸ் தகவல்



(புதுடில்லி)

இலங்கைத் தமிழர்களுக்காக கருணாநிதி உதட்டளவில் மட்டுமே ஆதரவைத் தெரிவித்தார். விடுதலைப்புலிகள் விவகாரத்தில் அவர் சாதுரியமான அணுகுமுறையைக் கையாண்டார் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் பணியாற்றிய அமெரிக்க தூதரக அதிகாரிகளை மேற்கோள் காட்டி இந்தத் தகவலை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருக்கிறது.

இலங்கை இறுதிக்கட்ட போரின் போது தமிழக அரசியல் கட்சிகள் வெறும் வார்த்தைகளால் மட்டுமே தங்களது கண்டனத்தை தெரிவித்தன. இலங்கைத் தமிழர்களுக்காக அந்தக் கட்சிகள் தெரிவித்த ஆதரவும் உதட்டளவில் மட்டுமே இருந்தது என்று 2006 இல் இந்தியாவுக்கான அமெரிக்க தூதரக கான்சல் ஜெனரலாகப் பணியாற்றிய டேவிட் ஹூப்பர் கூறியுள்ளார்.

2007 நவம்பர் 20 இல் இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகம் வோஷிங்டனுக்கு அனுப்பிய மற்றொரு தகவலில் தி.மு.க தலைவர் கருணாநிதி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு ஆதரவளிப்பது தொடர்பான விவகாரத்தில் கருணாநிதி சாதுரியமான அணுகுமுறையைக் கடைப்பிடித்தார். கட்சித் தொண்டர்களையும் காங்கிரஸையும் சமாதானப்படுத்தும் வகையில் அவர் நடந்து கொண்டதாக அமெரிக்க தூதரக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான அவரது கோரிக்கைகள் வெறும் வார்த்தை ஜாலங்கள் மட்டுமே. அவர் உதட்டளவில் மட்டுமே பேசினார். இலங்கைத் தமிழர்களுக்கு சாதகமாக கருணாநிதி பேசினாலும் அவர்களுக்காக மத்திய அரசை எவ்விதத்திலும் நிர்ப்பந்திக்கவில்லை என்று வோஷிங்டனுக்கு அனுப்பிய தகவல்களில் அமெரிக்க தூதரக அதிகாரிகள் தங்கள் கருத்தைப் பதிவு செய்துள்ளனர். (ஸ்ரீ-4)

## தயாநிதி மாறன் விவகாரம்

# சி.பி.ஐயை எதிர்த்து மனுத்தாக்கல்

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு ஊழலில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறனுக்கு எதிராக மத்திய புலனாய்வு துறை நேர்மையான முறையில் விசாரணை நடத்தப்படவில்லை எனக் குற்றம்சாட்டி உச்ச நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீட்டில் மாறனின் பங்கு குறித்த முக்கிய உண்மைகளை சிபிஐ கவனத்தில் கொள்ளவில்லை என பூஷண் தாக்கல் செய்துள்ள மனுவில் குற்றம்சாட்டியுள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி உச்சநீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்த மனுவில் ஏர்செல் நிறுவனத்தை மலேசிய நிறுவனத்துக்கு விற்குமாறு தயாநிதிமாறன் மிரட்டியதாகக் கூறப்படுவதற்காக ஆதாரம் எதுவும் இல்லை எனத் தெரிவித்திருந்தது. மேலும் 2001-2007 ஆம் ஆண்டு காலத்தில் தொலைத்தொடர்பு உரிமங்கள் வழங்கப்பட்டதில் நிர்ப்பந்தங்கள் இருந்ததற்கான முகாந்திரம் இல்லை என்று தயாநிதிமாறனுக்கு சிபிஐ நற்சான்றிதழ் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# பாரதச் செய்திகள்

# முதல்வர் ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 51.4 கோடி ரூபாய்

எனது சொத்து மதிப்பு 51.4 கோடி ரூபாய் தான் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சட்டசபையில் நேற்று முன்தினம் கேள்வி நேரம் முடிந்ததும் குடியரசுக் கட்சியின் தலைவரும் எம்.எல்.ஏ.வுமான செ.கு தமிழரசன் உரையாற்றுகையில், ஆட்சியில் இருப்பவர்கள் சொத்து கணக்கை வெளியிட்டு வருகிறார்கள். நேற்றுகாலை ஒரு ஆங்கில நாளிதழில் புரட்சித் தலைவி முதல்வர் ஜெயலலிதா தனது சொத்துக் கணக்கை வெளியிடவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

புரட்சித்தலைவி எதையும் வெளிப்படையாக செய்பவர். மனச்சாட்சி தவிர எதற்கும் அஞ்சமாட்டார். எனவே சொத்து கணக்கை முதல்வர் தெரிவிப்பாரா? என்பதை அறிய விரும்புகிறேன் என்றார்.

இதற்குப் பதிலளித்த முதல்வர் ஜெயலலிதா, உறுப்பினர் குறிப்பிட்ட ஆங்கில பத்திரிகை பெரிய இரகசியத்தை கண்டுபிடித்தது போல இந்தச் செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். இதில் எந்த இரகசியமும் இல்லை.

இந்திய தேர்தல் ஆணைய விதிமுறைப்படி சட்டமன்ற அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தனது சொத்து கணக்கை வெளியிட வேண்டும். அதன்படி நான் ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்ட போது 5 மாதங்களுக்கு முன்பு அதாவது ஏப்ரல் மாதம் எனது சொத்து கணக்கை வெளியிட்டேன். அப்போது அனைத்து பத்திரிகைகளிலும் அந்த விபரம் பெரிதாக வெளியிடப்பட்டு இருக்கிறது.

ஸ்ரீரங்கத்தில் நான் போட்டியிட்டபோது கொடுத்த விபரத்தின்படி எனது அசையும் சொத்து 13 கோடியே 3இலட்சத்து 77 ஆயிரத்து 929 ரூபாய்.

அசையா சொத்து ரூ38 கோடியே 37 இலட்சத்து 40 ஆயிரம். எனது மொத்த சொத்தின் மதிப்பு ரூ51 கோடியே 40 இலட்சத்து 67 ஆயிரத்து 929 ரூபாய்.

தேர்தல் முடிந்து 3 மாதங்கள் ஆகியிருக்கிறது. அதன்பின் நான் இதுவரை எந்த சொத்தும் வாங்கவில்லை என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (ஸ்ரீ-2)

# கனிமொழி விரைவில் விடுதலையாக வாய்ப்பு

(சென்னை)



2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஊழல் வழக்கில் முன்னாள் மத்திய மந்திரி ஆ.ராசா, கனிமொழி எம்.பி, கலைஞர் டி.வி நிர்வாக இயக்குனர் சரத்குமார் உட்பட 15 பேர் கைது செய்யப்பட்டு டில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு தொடர்பான விசாரணை டில்லியில் உள்ள சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த நிலையில் சி.பி.ஐ 3 ஆவது குற்றப் பத்திரிகையை அடுத்து வாரம் தாக்கல் செய்ய உள்ளது. இதற்கிடையே ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான விசாரணை விரைவில் முடிவுக்கு வர உள்ளது. இந்த விசாரணை முடிவடைந்தால் சிறையில் அடைக்கப்பட்டு இருப்பவர்கள் பிணை மனுத்தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திகார் சிறையில் 100 நாட்களுக்கும் மேலாக இருந்து வரும் கனிமொழி சிறப்பு நீதிமன்றில் விசாரணை முடிந்ததும் தன்னை பிணையில் விடுதலை செய்யக் கோரி மனு அனுப்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சி.பி.ஐ தரப்பில் இதற்கு எதிர்ப்பு இருக்காது என்று தெரிகிறது. எனவே கனிமொழி பிணையில் விடுதலையாகி வெளியில் வர வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது. அநேகமாக இன்னும் 2வாரங்கள் கழித்து அவர் விடுதலை ஆவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு தொடர்பாக கைதானவர்களில் கனிமொழிதான் முதன் முதலாக பிணை கோரி முறையீடு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது விசா ரணை முடிந்ததும் பிணை கேட்கும்படி உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி இருந்தது. எனவே அவர் பிணை கோரி மனு செய்த உடனேயே அவருக்கு விடுதலை கிடைத்து விடும் என்று சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

# 2ஜி அலைக்கற்றை ஊழல் வழக்கில் எந்த விசாரணைக்கும் தயார்

## அருண்ஷோரி தெரிவிப்பு

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் எந்த விசாரணைக்கும் தயாராக உள்ளேன் என முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் அருண் ஷோரி கூறினார்.

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் முன்னாள் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் அருண்ஷோரி கலந்து கொண்டார்.

அதன்பின்னர் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்ற அமைச்சர்களையும் விசாரிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் சி.பி.ஐயிடம் அறி வுறுத்தியுள்ளது. நான் எந்த விசாரணைக்கும் தயாராக உள்ளேன். இது குறித்து ஏற்கனவே தெரிவித்துள்ளேன்.சிறையில் உள்ள முன்னாள் அமைச்சர் ராஜா முந்தைய அமைச்சர்களின் வழியில் தான் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறுகிறாரே என கேட்டபோது டிராய் விதிமுறைகளைப் பின்பற்றியதாக ராஜா கூறுகிறார். மேலும் பிரதமர் மற்றும் நிதியமைச்சருக்குத் தெரிந்து தான் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறுகிறார்.

இதனால் தவறு நடக்கவில்லை என்கிறார். ராஜா மீது ஆதாரங்கள் போதுமானதாக இல்லை என செய்திகள் வெளிவருகிறதே. இதனால் 2 ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கின் தற்போதைய நிலை என்ன? இது குறித்து கருத்து எதுவும் தெரிவிக்க விரும்பவில்லை. இவ்வாறு அருண் ஷோரி தெரிவித்தார். (ஸ்ரீ-4)



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு டெல்லியில் நடந்த சிறந்த ஆசிரியர்களுக்கான தேசிய விருது வழங்கும் விழாவில் ஜனாதிபதி பிரதீபா பட்டேல் விருது வழங்குவதை படத்தில் காணலாம்

# மாத்தறையில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

மாத்தறை மெதஹேன பிரதேசத்திலுள்ள இறப்பர் தோட்டத்தில் உருக்குலைந்த நிலையிலிருந்த சடலமொன்று பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலத்தின் முகத்தில் தார் போன்ற திரவமொன்று பூசப்பட்டுள்ளமையால் கண்டுபிடிக்கப்பட்ட சடலம் யாருடையது என்பதை இனங்காண்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக மாத்தறை பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

5 நாட்களுக்கு முன்னர் இந்த நபர் உயிரிழந்திருக்கலாம் அல்லது கொலை செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சடலம் தொடர்பிலான நீதிவான் விசாரணைகளை மாத்தறை நீதிவான் தலைமையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# டுபாயில் கார் திருட்டில் ஈடுபட்ட 4 இலங்கையர்களுக்கு எதிராக வழக்கு

டுபாயில் கார் திருட்டில் ஈடுபட்ட நான்கு இலங்கையர்கள் உள்ளிட்ட ஆறு பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கவனிப்பாரற்ற நிலையில் காணப்படும் கார்களை குறித்த நபர்கள் களவாடிப் பயன்படுத்துவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நான்கு இலங்கையர்களும் 2 சிரிய நாட்டைச் சேர்ந்தவர்களும் கூட்டாக இணைந்து இந்த வாகனக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

டுபாய் மாநகரசபையினால் கவனிப்பாரற்று கிடப்பதாக எச்சரிக்கை முத்திரை குத்தப்பட்ட கார்களை தேடி அவற்றைக் கழுவி புதிய சாவிகளைத் தயாரித்து இந்தக் கொள்ளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல் தடவையாக நீதிமன்றில் ஆஜராகி சந்தேக நபர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளனர்.

எனினும் விசாரணைகளின்போது மூன்று இலங்கையர்கள் தாம் கார்களை கொள்ளையிட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கார் ஒன்றிற்காக புதிய சாவி ஒன்றை தயாரிப்பதற்காக சிரிய பிரஜை 800 தினார்களை பெற்றுக்கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கை மீனவர்கள் 10பேர் இந்தியக் கடற்பரப்பில் கைது

(கொழும்பு)

இந்தியக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 10 இலங்கை மீனவர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்துள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆந்திர மாநிலம், கிருஷ்ணாம்பட்டினம் பகுதியில் நேற்று முன்தினம் கடலோர காவல் படையினர் ரோந்து நடவடிக்கைக்குச் சென்றபோது இரண்டு விசைப்படகுகளில் 10 இலங்கை மீனவர்கள் மீன்பிடித்துக் கொண் டிருக்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்த விசைப்படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு குறித்த 10 பேரையும் சென்னை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# கிளிநொச்சி மாவட்டத்தில் காணி உறுதியை இழந்தவர்களுக்கு காணி உறுதிப் பிரதிகள்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் காணி உறுதியை இழந்தவர்களுக்கு காணி உறுதிப் பத்திரத்திற்கான பிரதிகளை காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கிவைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் இந்தக் காணி உறுதிப்பத்திரத்திற்கான பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

பூநகரி, கரைச்சி, கண்டாவளைப் பகுதிகளைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கே கொழும்புக் காணித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் இந்தப்பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் காணி அபிவிருத்தி அமைச்சின் பிரதியமைச்சர் ஹெம்லத், அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ், கொழும்பு காணித் திணைக்கள உயரதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-4)

# மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மீது போர் மீறல் குற்றச்சாட்டுக்கள்

## ஐரோப்பிய மனித உரிமைகளுக்கான மையம் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது படைத்தரப்பினர் போர்க்குற்றங்களை மேற்கொண்ட பின்னணியில் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மீது ஐரோப்பிய அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான மையம் போர் மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது. இது தொடர்பான அறிக்கையினை இந்த அமைப்பு இந்த ஆண்டு ஜனவரியில் வெளியிட்டுள்ளது.

படைத்துறையின் 57 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியாக இருந்த ஜெகத் டயஸ் தற்போது ஜேர்மன் நாட்டிற்கான இலங்கையின் துணைத் தூதுவராக பதவியில் உள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்கும் இடையில் 57 ஆவது படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸினால் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல் குற்றச்சாட்டுக்கள் எனத் தலைப்பிடப்பட்ட 23 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் ஜெகத் டயஸிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விபரிக்கப்பட்டுள்ளதோடு 57 ஆவது படைப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட போர் மீறல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஊடகங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத நேரடிச் சாட்சியங்களும் இவ்வறிக்கையில் பதிவாகியுள்ளன.

சுவிஸ் நாட்டில் ஜெகத் டயஸிற்கு எதிராக குற்றவியல் வழக்குத் தொடுத்துள்ள மனித உரிமைக் குழுவின் இணைப்பாளர் பிலிப் கிராண்ட் கூறும் போது, பல்வேறு அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இக்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான மையத்தினதும் ஐ.நா. நிபுணர் குழுவினதும் அறிக்கைகளும் அவற்றில் உள்ளடக்கம் எனத் தெரிவித்துள்ளார்.

டயஸ் தலைமையிலான படையினர் போர்க் குற்றங்களாக வரையறுக்கத்தக்க பாரதூரமான மனித உரிமை மீறல்களை மேற்கொண்டமைக்கான நம்பகமான ஆதாரங்கள் இவை என அவர் கூறியுள்ளார்.

டயஸ் மீதான குற்றச்சாட்டுக்கள் சுவிஸ் நீதித்துறையினால் விசாரிக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ள பிலிப் கிராண்ட் இந்த மோசமான குற்றச்சாட்டுக்கள் காரணமாக இராஜதந்திர வாய்ப்புக்கள் டயஸிற்கு வழங்கப்படக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

போர் தொடர்பான மேலோட்டமான அறிமுகத்துடனும் பொதுமக்களின் அவலங்கள் ஏற்றுக் கொள்ள முடியாத பேரிழப்பு என 2009 ஜூன் முதலாம் திகதி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வெளியிட்ட கூற்றையும் மேற்கோள் காட்டியவாறு இவ்வறிக்கை தொடங்குகின்றது.

தொடர்ந்து வீக்கிலீக்ஸ் தகவல் கசிவினை ஆதாரமாகக் கொண்ட 2010 ஜனவரி 15 அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் அனுப்பிய அறிக்கையில் போர் மீறல்களுக்கு பொறுப்பானவர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரது சகோதரர்கள் உட்பட மற்றும் முன்னாள் படைத்துறைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட்ட இராணுவத் தலைமைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

அரசாங்கம் எவ்வாறு பல மூத்த படைத்துறைத் தளபதிகளை அனைத்துலக நாடுகளின் தனது இராஜதந்திர பிரதிநிதிகளாக அனுப்பி வைத்துள்ளது என்பது தொடர்பாக இவ்வறிக்கையில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது.

அதில் ஜேர்மன், சுவிஸ் மற்றும் வத்திக்கான் ஆகிய நாடுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜெகத் டயஸ் பற்றியும் விபரிக்கப்பட்டுள்ளது.

ஜெகத் டயஸ் மீதான போர்க்குற்றங்களை விசாரிக்கவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தவறியுள்ளதாக ஜேர்மன் நாட்டின் மீது அந்த அறிக்கையில் குற்றம் சுட்டப்பட்டுள்ளது. மாறாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு இராஜதந்திர கடவுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு புதுப்பித்தல் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக ஜேர்மனியிலுள்ள இலங்கைத் தூதரகத்தை நாடும் தமிழர்களை அச்சுறுத்தவும் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஜேர்மன் அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்டவராக மட்டும் விளங்கவில்லை. அவர்களுடைய பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

ஜேர்மனியிலுள்ள தமிழ்ச் சமூகத்தைக் கண்காணிக்கவும் விசாரணைகளுக்கு உட்படுத்தவும் ஜேர்மன் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் புலனாய்வுத் துறையினரால் ஜெகத் டயஸ் கையாளப்படுகின்றார். சுவிஸ் நாட்டிலும் இதே வகை நடவடிக்கைகள் இடம் பெறுகின்றமை தெரியவந்துள்ளது.

ஒவ்வொரு போர் மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சம்பவங்களையும் கவனமாக ஆராய்ந்து அது தொடர்பான நம்பகமான ஆதாரங்களுடன் அவை அறிக்கையிடப்பட்டுள்ளன என ஐரோப்பிய அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கான மையம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**

61, Kachcheri Nallur Road, Chundikuli, Jaffna.
Phone:- 021 2228093 E.mail: alliancejaffna@yahoo.com

**புகைப்படக் கண்காட்சியும் புகைப்படப் போட்டியும்**

**புகைப்படக் கண்காட்சி**

**நீர், குடங்கள், பெண்கள்**

இலங்கைக்கான பிரெஞ்சுத் தூதுவர், மேதகு திருமதி கிறிஸ்தீன் றொபிஷோன் அவர்கள் எடுத்த புகைப்படங்கள்.
காலம்: September 7 ஆம் திகதி புதன் முதல் September 14 ஆம் திகதி புதன் வரை (சனி, ஞாயிறு உட்பட)
நேரம்: காலை 9.00-மாலை 7.00
இடம்: Alliance Franaise de Jaffna (61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்)

**புகைப்படப் போட்டி**

நீங்களே சுயமாக எடுத்த புகைப்படமொன்றினை அனுப்பிப் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.
புகைப்படப் போட்டிக்கான முடிவுத் திகதி 14 September 2011.
தொனிப் பொருள்: ***நீர், குடங்கள், பெண்கள்***
படம் கறுப்பு-வெள்ளை ஆகவோ, வண்ணமாகவோ இருக்கலாம்.
பரிசுகள்: முதல் மூன்று பரிசுகளுக்கும் வங்கி ஒன்றின் நிலையான வைப்புச் சான்றிதழும் (FD) பாராட்டுச் சான்றிதழும்.
*1ம் பரிசு: Rs. 15,000 2ம் பரிசு: Rs. 10,000 3ம் பரிசு: Rs. 5, 000.*
தெரிவு செய்யப்படும் மேலும் 9 போட்டியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
இப் பன்னிரண்டு புகைப்படங்களும் பின்னர் இதே தொனிப்பொருளில் நடத்தப்படும். இரண்டாவது புகைப்படக் காட்சியில் உள்ளடக்கப்படும் போட்டிக்கான பதிவுப் படிவம் மற்றும் விதிகள் முதலியவற்றைக் கண்காட்சி நடைபெறும் இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(6075)

துணிவுடைய மக்களே உன்னதமான எதிர் காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறார்கள் -நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மக்கள் துணிந்துவிட்டால் பூதம் என்ன செய்துவிட முடியும்?

குடாநாட்டைக் கலக்கி வரும் பூதம் தொடர்பில் இப்போதுதான் அரசியல் தரப்பில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. நேற்றைய தினம் உயர்மட்ட மாநாடு கூட்டப்பட்டு பூதம் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக எதிர்வரும் பத்தாம் திகதி அடையாள உண்ணாவிரதத்தை முன்னெடுப்பதற் கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவை அரசியல் மட்டத்தில் முன்னெடுக்கப்படு கின்றதாக இருக்க, பொதுமக்களோ அரசியல், நீதிபரிபாலனம் இவை எவற்றிலும் நம்பிக்கை அற்ற நிலையில், தமக்கான பாதுகாப்புக்குத் தாமே பொறுப்பு என்று முடிபெடுத்து விட்டார்கள்.

அதன் காரணமாக எந்த அரசியல் த்லைமை களினதும் வழிகாட்டல் இன்றி மக்களிடையே மகத் தான ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. இந்த ஒற்றுமைக் கான பெறுமானத்தை அளவிடுவதற்கு கருவிகள் மனித மொழிகள் ஏதுமில்லை எனலாம்.

இருண்ட வேளை மர்மப் பூதத்தை துரத்தும் மக்கள் பூதம் ஒளியும் (மறையும்) இடம்வரை சென்று வாதம் புரின்றனர் என்றால், அது சாதா ரண விடயம் அன்று.

என்ன செய்வது! மக்களின் கரங்கள் வெறுமையானவையாக இருக்கின்றன. மறு புறத்தில் கெந்தகக் குண்டுகளோடு ஒருதரப்பு.

இப்போதும் துட்டகைமுனுக்கள் இருப்பார் களாயின் நேருக்குநேர் என்ற பண்பாட்டின் கீழ் பலம் பார்க்கப்படலாம்.

அப்படிப்பலத்தை நிருபிக்க முற்பட்டால் எல்லாள னின் வழிவந்தார்க்கு வெற்றி நிச்சயம் என்போம்.

இங்கும் ஒரு நிபந்தனை. தமிழ் அரசியல் தலைமைகள் எதுவும் தலைகாட்டலாகாது. அவ்வாறு தலைகாட்டினால் எல்லாளன் பரம் பரைக்கு பேராபத்து ஏற்பட்டுவிடும்.

நேற்றைய தினம் கூட ஒரு அன்பரைச் சந்தித் தேன். பெரிய பூவரசு ஒன்றில் ஏறிநின்று கதியால் வெட்டிக் கொண்டிருந்தார். வேலியடைப்புப் போலும் என்றேன்.

மெல்லச்சிரித்தார். வேலியடைப்பு அல்ல. பூதத்தைக் கலைப்பதற்கு என்றார். நிலைமையை புரிந்துகொள் ளாமல் நின்று பார்த்தேன். வெட்டப்பட்ட கதியால் மண்வெட்டிப்பிடி அளவிற்கு சரிசெய்யப்பட்டது.

பயந்தால் வாழமுடியாது. நிம்மதியான வாழ்வு தேவை. படுக்கையில் இது இருந்தால் தான் பூதத்தை துரத்தலாம் என்றார்.

அவர் சர்வ சாதாரணமாகக் கூறியிருந்தாலும், என் கன்னத்தின் ஓரம் நனைந்து கொண்டன.

அட! தமிழன் வீரனடா என்று நினைத்து என் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டேன்.

பூதம் முடிய இந்தப் பொல்லை என்ன செய் வீர்கள் என்று மெல்லக் கேட்க, அடுத்த தேர்த லுக்கு ஆட்கள் வீடுதேடி வருவார்கள். அப்போது பொல்லு உதவும் என்றார்.

எனக்கு அவர் கூறியது புரியவே இல்லை.

## நீதிமன்றத்தால் அபராதம்

காப்புறுதி பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சிறைத் தண்டனையும் வழங்கி சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. சாவகச்சேரி பிரதேசத்தில் சம்பவ தினம் மேற்படி குற்றச்சாட்டின் பேரில் சாவகச்சேரி பொலிஸாரால் குறி த்த நபருக்குகெதிராக நேற்று மன்றில் வழக்கு தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி மாணிக்க வாசகர் கணேசராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் குற்றவாளியாகக்கண்டு மேற்படி தீர்ப்பை வழங்கினார். (ஸ்ரீ-12-24)

## சைக்கிள் திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபருக்கு விளக்க மறியல்

சாவகச்சேரி பிரதேசத்தில் பல மோட்டார் சைக்கிள் கொள்ளைச் சம்ப வத்துடன் தொடர்புடையவரென சந்தே கிக்கப்படும் நபர் ஒருவரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறி யலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டது.

குறித்த நபரை கைது செய்த யாழ். பொலிஸார் யாழ். சிறைச்சாலை அதி காரிகளூடாக நேற்றைய தினம் சாவ கச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன் னிலையில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் குறித்த நபர் பல கொள்ளைச் சம்பவத்துடன் தொடர் புடையவரென சந்தேகிக்கப்படுவதால் குறித்த நபர் தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விசாரணை அறிக் கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தர விட்டார். (ஸ்ரீ-12-24)

## மர்ம மனிதன் பீதியால் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ள மக்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் ஓமந்தை யில் உள்ள புதிய சின்னக்குளம் கிராம மக்கள் கடந்த மூன்று நாட்களாக மர்ம மனிதன் பீதியின் காரணமாக அப் பிரதேசத்தில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இரவை கழித்து வருவதாக கிராம மக்கள் தெரிவித் தனர்.

தங்கள் குடும்பங்களுடன் அந்த கிராமத்தில் உள்ள பெண்கள், சிறுவர் கள் மற்றும் ஆண்களும் இரவு நேர த்தை தேவாலயத்திலேயே கழித்து வருகின்றனர். இவர்களுக்கான முழு மையான பாதுகாப்பை தேவாலயத் தின் அருட் தந்தை வழங்கி வருகின்றார்.

கடந்த மூன்று நாட்களாக மர்ம மனிதனின் அட்டகாசம் இடைவிடாது அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ளமை யினால் மக்கள் பல்வேறு அசௌகரி யங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரியவரு கின்றது. (ஸ்ரீ-2)

## கலந்துரையாடல்

யாழ்.கல்வி வலய விசேட கல்விப் பொறுப்பாசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.1.00 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தேசிய, மாகாண, வலய மட்டத்திலான விளையாட்டுப் போட்டி தொடர்பாகக் கலந்துரையாடப்பட வுள்ளது.

எனவே அனைத்து விசேடகல்விப் பொறுப்பாசிரியர்களையும் போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்களது விப ரங்களுடன் தவறாது வருகை தருமாறு யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ)

## ஆட்டோ தடம் புரண்டு இளைஞன் படுகாயம்

பலாலி வீதி கோண்டாவில் சந்திக்கு அருகில் நேற்று ஆட்டோ தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

பலாலி வீதியில் வேகமாக பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோ ஒரு சிறு வீதிக்குள் சடுதியாக திருப்பிய போதே ஆட்டோ தடம் புரண்டது.

இவ் விபத்தில் திருநெல்வேலியைச் சேர்ந்த க. தர்சன் (வயது 25) என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார். (ச-4)

## சிறுவர் காப்பகங்களின் தரம் தொடர்பில் ஆராய வேண்டும்

### ஜனாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

சிறுவர் காப்பகங்களின் நிர்வாகம் மற்றும் தரம் தொடர்பில் சரியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்துள்ளார்.

பெண்கள் எதிர்நோக்கும் குடும்ப வன்முறைகள் தொடர்பிலான சட்ட மூலத்தை தயாரிக்கும் போது நாட்டி லுள்ள குடும்ப கட்டமைப்புக்கள் மற் றும் கலாசார விழுமியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதற்கு சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்து ரையாடலின் போதே ஜனாதிபதி இத னைத் தெரிவித்தார்.

மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு உளவள ஆலோசனைகளை பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளை பிரதேச ரீதியில் ஏற்படுத்துவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது கவ னம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

## படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் விசேட வைத்திய நிபுணர்களின் உதவியுடன் வைத்திய பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் நன்மை கருதி விசேட வைத்திய நிபுணர்களினால் வைத் திய பரிசோதனை நடத்துவதற்கு இரா ணுவத்தினரின் 51 ஆவது படைத் தலை மையகத்தினால் ஏற்பாடு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் அள வெட்டி மக்கள் சபை மண்டபத்தில் இவ் வைத்திய பரிசோதனை நடைபெறவுள் ளது.

இதற்கு கண்டி போதனா வைத்திய சாலை கண், வாதம், நரம்பு மற்றும் உடம்பில் ஏற்படும் அனைத்து நோய் கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தரவுள்ளனர்.

அத்துடன் வைத்திய பரிசோதனை தொடர்பான ஆலோசனைகள் மற் றும் மருந்துகள் இலவசமாகப் பெற் றுக்கொள்ள முடியுமென யாழ். பாது காப்பு படைத் தலைமையகம் அறிவித் துள்ளது. (ஸ்ரீ-2)

## துப்புரவு செய்த கொடுப்பனவு வழங்கல்

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியேறி தமது காணிகளை துப்புரவு செய்த மக்களுக்கு துப்புரவு செய்த மைக்கான கொடுப்பனவு இன்று பகல் ஒரு மணிக்கு பழவீமன்காமம் வடக்கு ஜே/236 கிராமசேவகர் அலுவலகத்தில் வைத்து வழங் கப்படவுள்ளதென கிராம முன்னேற்ற சங்கச் செயலாளர் சி. வைகுந்தநாதன் தெரிவித் துள்ளார். (ச-12)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### எழுமின்! விழிமின்



எழுமின்! விழிமின்! நமது தாய்த்திருநாடு இம் மகத்தான தியாகத்தை வேண்டி நிற்கிறது. இம் மகத்தான பணி-இளைஞர்களே செய்யக்கூடிய பணி. இளமை, ஆற்றல், வலிமை, கட்டுடல், அறி வுக் கூர்மை உடைய -இவர்களுக்கே, இளைஞர்க ளுக்கே உரியது இப்பணி. நமது நாட்டில் நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் இத்தகைய இளைஞர்கள் இருக்கிறார்கள்.

இளைஞர்களே! எழுமின்! விழிமின்! உலகம் உங்களை இரு கை நீட்டி, அழைக்கிறது. ஊக்கம் உங்கள் இரத்தத்தில் கிளர்ந்தெழ எழுவீர்களாக! ஏழை என்றோ, நண்பர்கள் என்றோ யாரும் இல்லை என்றோ நினைந்து வருந்த வேண்டாம். அந்தோ! பணமா மனிதனைப் படைக்கிறது? இதுவரை யாரேனும் அப்படிக் கண்டதுண்டா?

மனிதனல்லவா செல்வத்தை ஆக்குகிறான்? இவ்வுலகமனைத்தும் மனித சக்தியினால் உருவாகியிருக்கிறது! ஊக்கவுணர்வினால் உருவாகியிருக்கிறது! நம்பிக்கை எனும் வலிமையினால் உருவாகியிருக்கிறது!

# மேலும் ஆயிரத்து 700 முன்னாள் புலி உறுப்பினர்கள் இம்மாதம் விடுதலை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் ஆயிரத்து 700 முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் இம்மாதம் விடுவிக்கப்படுவார்கள் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவர்களில் எதிர்வரும் 19ஆம் திகதி 500 முன்னாள் போராளிகள் வவுனியாவில் வைத்து விடுதலை செய்யப்படவுள்ளனர். 30ஆம் திகதி மேலும் ஆயிரத்து 200 முன்னாள் போராளிகள் விடுவிக்கப்படுவார்கள் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.திசாநாயக்க தெரிவித்தார்.

புனர்வாழ்வு முகாம்களில் 11ஆயிரத்து 696 பேர் புனர்வாழ்வளிப்பதற்காக தடுத்து வைத்திருந்ததாகவும், அவர்களில் தற்போது 8 ஆயிரத்து 240 பேர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறிய அவர், இம்மாதத்தில் மேலும் ஆயிரத்து 700 பேர் விடுவிக்கப்பட்ட பின்னர், 756 பேர் மாத்திரமே புனர்வாழ்வு முகாம்களில் மீதமாகக் காணப்படுவர் எனவும் குறிப்பிட்டார். அந்த 756 பேரையும் மிக விரைவாக விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் அல்லது அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும் என அமெரிக்கா அண்மையில் இலங்கைக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மத்தி புதுவளவு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 6.40 தொடக்கம் 8.02 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறும். (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் வாழைக்குட்டிகள்

(கிளிநொச்சி)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி, மத்திய விவசாய அபிவிருத்தித்திட்டநிதி என்பவற்றின் கீழ் கிளிநொச்சி மாவட்ட பழமர அபிவிருத்திக்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 50 வீத மானிய விலையில் 7ஆயிரத்து 400 வாழைக்குட்டிகள் வழங்கப்பட்டுவருவதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இவ்வாழைக்குட்டிகள் கிளிநொச்சி கிழக்கு, கிளிநொச்சி மேற்கு, பூநகரி, கனகபுரம், கோணாவில், புன்னை நீராவி, நல்லூர், அக்கராயன் குளம்,திருவையாறு,இராமநாதபுரம் ஆகிய விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பயிர்ச்செய்கைக்கு நீரை சிக்கனமாக பயன்படுத்துவதற்காக சொட்டு நீர்ப்பாசன உபகரணத் தொகுதிகள் 50% வீத மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

# 700 விவசாயிகளுக்கு மானிய விலையில் நீரிறைக்கும் இயந்திரம்

அரச நிதி உதவித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி விவசாயத்திணைக்களத்தினரால் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேசங்களிலுள்ள 700 விவசாயிகளுக்கு 50 வீத மானியவிலையில் நீர் இறைக்கும் இயந்திரமும் அதனோடு இணைந்த உதிரிப்பாகங்கள் என்பன வழங்கப்படுவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

எனவே இவ் நீர் இறைக்கும் இயந்திரத்தை விரைவில் பெற்று விவசாயத்தை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த பகுதியில் உள்ள ஆயிரத்து 200 விவசாயிகள் முன்னர் நீர் இறைக்கும் இயந்திரம், அதனோடு இணைந்த உதிரிப்பாகங்கள் என்பவற்றை 50 வீத மானிய விலையில் பெற்று விவசாயத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-3)

# பூநகரி பிரதேச சபையின் முதலாவது கூட்டம்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணியளவில் பூநகரி பிரதேச சபையின் தலைவர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் பூநகரி பிரதேச சபையின் புதிய கட்டட மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச சபை செயலாளரினால் சகல உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் நடைபெற்று முடிந்த தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற் றும் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்டு வெற்றியீட்டிய 62 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 4 உறுப்பினர்களுமாக 10 உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனரென தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-12-84)

# வருடாந்தம் ஒரு இலட்சம் பேர் சிறையில் அடைக்கப்படுகின்றனர்

## அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வருடாந்தம் சராசரி ஒரு இலட்சம் பேர் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுவதாகவும் இவர்களில் சுமார் ஐம்பதாயிரம் பேர் ஒரே தவறை மீண்டும் இழைத்துவிட்டு, சிறைச்சாலைக்கு செல்வதாகவும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும் தெரிவித்தார்.

இதேவேளை, உழைக்கும் வயதெல்லையை உடைய 90 சதவீதத்தினர் குற்றங்கள் புரிந்து சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர். விசேட திறன்களைக் கொண்டவர்ளும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆசியாவின் அற்புத நாடாக இலங்கையை மாற்ற வேண்டுமானால் சிறைச்சாலைகளில் முடங்கியுள்ள இந்த வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

கைதிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சியை வழங்குவதற்கான ஒப்பந்தமொன்று கண்டி போகம்பறை சிறைச்சாலையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் டலஸ் அழகப்பெரும,

சிறைச்சாலை கலாசாரம் மாற்றியமைக்கப்பட வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளது. சிறைக்கைதிகளும் மனிதர்களே.

சிறைச்சாலை க்லாசாரத்தை சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சினால் மட்டும் தனியாக மாற்றியமைக்க முடியாது. இந்த நிலையில் மேற்படி இரு அமைச்சுக்களும் இணைந்து தொழில் வழிகாட்டுதல் தொடர்பான திறன்களை சிறைக்கைதிகளுக்கு வழங்கி அவர்களுக்கு சுயதொழிலை பெற்றுக்கொடுத்தல் அல்லது சர்வதேச அரங்கில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்களை வழங்குவதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதற்கு கல்வி அமைச்சின் ஆதரவையும் பெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இப் பயிற்சி மூலம் என்.வீ.கியூ. (தேசிய தொழிற் கல்வித்துறை தகைமை ( NVQ ) என்ற சான்றிதழ் வழங்கப்படும். இதில் 7ஆவது மட்டத்தை பூர்த்தி செய்தவர்கள் பல்கலைக்கழக பட்டத்திற்கு சமமான தராதரத்தைப் பெறுவர். 6ஆவது மட்டத்தைப் பூர்த்தி செய்பவர்கள் டிப்ளோமா தராதரத்தைப் பெறுவர் என்றார். (ஸ்ரீ-2)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ***உயிர்த் தன்மைக்கு உயிரானவன்*** எனும் விடயம் பற்றி ஆசிரியர் இரா.சண்முகசுந்தரம் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-12-35)


# மக்கள் வங்கி அறிவித்தல்

*மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.07.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01. | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும், நாவலர் வீதி சேவை நிலையமும், | 25.09.2011 மு.ப. 8.30 | மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை-030 |
| 02. | காங்கேசன்துறைக்கிளையும், மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03. | யாழ். பிரதான வீதிக்கிளையம், உரும்பிராய் சேவை நிலையமும், | | |
| 04. | ஊர்காவற்றுறை | | |
| 05. | நெல்லியடி | | |
| 06. | அச்சுவேலி | | |
| 07. | சங்கானைக்கிளையும், பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 08. | சுன்னாகக்கிளையும், கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 09. | சாவகச்சேரிக்கிளையும், கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 10. | வல்வெல்டித்துறை | | |
| 11. | யாழ். பல்கலைக்கழகக்கிளையும், திருநெல்வேலி சேவை நிலையமும், கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 12. | யாழ். கன்னாதிட்டிக்கிளையும், இணுவில் சேவை நிலையமும் | | |
| 13. | பருத்தித்துறைக்கிளையும், புலோலி சேவை நிலையமும் | | |

*அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.*

**பிராந்திய முகாமையாளர்**
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2011.09.07

(சி-4336)

# இரகசியத் திட்டத்தை கைவிட்ட இங்கிலாந்து

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் புதிய திட்டத்தில் பந்து வீச்சு செய்ய நினைத்திருந்த இங்கிலாந்து அணியினர் கடைசி நேரத்தில் பின்வாங்கியது தெரியவந்துள்ளது.

இங்கிலாந்து தொடரில் இந்திய அணியை வீழ்த்த ஒவ்வொரு நாளும் புதிய திட்டத்தை முயற்சித்து வருகின்றனர். இப்படித்தான் சமீபத்தில் முடிந்த டெஸ்ட் தொடரில் சச்சினுக்கு எதிராக ஒரு திட்டத்தை செயல்படுத்தினர்.

இப்போது ஒருநாள் தொடரிலும் இரகசிய திட்டம் தயார் செய்த தகவல் இப்போது வெளியாகியுள்ளது. இது குறித்து தி டெய்லி டெலிகிராப் என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில்,

இங்கிலாந்து வீரர்கள் புதிய முறையில் பந்து வீசும் திட்டத்தில் தயாராகி இருந்தனர்.

அதாவது பந்து வீச ஓடிவரும் வலது கை பந்து வீச்சாளர்கள் வழக்கமாக பந்தை வலது கையில் வைத்து தான் வீசுவார்கள். புதிய திட்டத்தின்படி பந்தைஇடது கையில் வைத்துக் கொண்டு ஓடி வருவது, பின் பந்து வீச்சு செய்யும் போது உடனடியாக வலது கைக்கு மாற்றி பந்து வீசும் திட்டத்தில் இருந்தனர். வலைப் பயிற்சியிலும் இதேபோன்று தான் பயிற்சியில் ஈடுபட்டார்களாம்.

சமீபத்தில் முடிந்த நோட்டிங்காம் டெஸ்ட் போட்டியில் இயன்பெல் சர்ச்சைக்கு பின் இந்த முறையில் பந்து வீச்சு செய்ய திட்டமிட்டனர். ஆனால் இது இரு பெரிய கிரிக்கெட் சபைகளின் உறவை பாதித்து விடும் என்பதால் கைவிட்டனராம்.

பின் இப்போதைய ஒருநாள் தொடரில் இந்திய துடுப்பாட்ட வீரர்களை இந்த இரகசிய திட்டம் மூலம் வீழ்த்துவது அல்லது எதிர்வரும் இந்திய தொடரில் அறிமுகம் செய்யலாம் என நினைத்து இருந்தனர். இவ்வாறு பந்து வீச்சு செய்வது தவறில்லை என்று இங்கிலாந்து அணி நிர்வாகம் நினைத்துள்ளது. இருப்பினும் சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தடைவிதித்து விடும் என்பதால் கடைசி நேரத்தில் பின்வாங்கியது. இவ்வாறு அந்த பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

**விதி எப்படி?**

சர்வதேச கிரிக்கெட் விதி 42.1 இன் படி விளையாட்டு உணர்வுடன் போட்டியின் பாரம்பரியம் பாதிக்கப்படாமல் கிரிக்கெட் நடப்பதை இரு அணித் தலைவர்களும் உறுதி செய்ய வேண்டும்.

விதி 42.2 இன்படி துடுப்பாட்ட வீரர் பந்தை எதிர்கொள்ளத் தயாராகும் போது அல்லது எதிர் கொள்ளும் போது எந்த வீரரும் அவரது கவனத்தை திசை திருப்பும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது.

இதனால் தான் இங்கிலாந்து வீரர்கள் பின்வாங்கினர் என்று தெரிகிறது.

# இங்கிலாந்துடனான ஒருநாள் தொடர் சச்சின் டெண்டுல்கர் விலகினார்




இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் பங்கு பற்றுமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

டெண்டுல்கரின் வலதுகால் பெருவிரலில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக அவர் குறைந்த பட்சம் 6 வாரகாலம் ஓய்வுபெற வேண்டுமென லண்டனில் அவரை பரிசோதித்த மருத்துவர் கூறியுள்ளார். அதையடுத்து இங்கிலாந்துடனான ஒருநாள் தொடரிலிருந்து டெண்டுல்கர் விலகியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த எஸ். பத்ரிநாத் டெண்டுல்கருக்குப் பதிலாக இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரின் முதல் போட்டி மழையினால் கைவிடப்பட்டது.

இதேவேளை மேற்படி உபாதை காரணமாக சம்பியன்ஸ் லீக் தொடரில் மும்பை அணியின் சார்பில் டெண்டுல்கர் விளையாடுதும் சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# காலி ஆடுகளத்தின் தரம் மோசம் சிறிலங்கா கிரிக்கெட் விளக்க வேண்டும்

## ஐ.சி.சி. அறிவிப்பு

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதல் போட்டி நடைபெற்ற காலி ஆடுகளம் குறைந்த தரம் உடையது என ஐ.சி.சி. போட்டி மத்தியஸ்தர் கிறிஸ் புரோட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கைக் கிரிக்கெட் 14 தினங்களுக்குள் எழுத்து மூலம் ஐ.சி.சிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். சிறிலங்கா கிரிக்கெட்டின் விளக்கம் ஐ.சி.சிக்கு திருப்தியளிக்காவிட்டால் கடும் அபராதமும் திருத்த நடவடிக்கைக்கான பணிப்புரையும் விடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி டெஸ்ட்போட்டியில் இரு அணிகளும் சொற்ப எண்ணிக்கையான ஓட்டங்களையே பெற்றன. போட்டியின் நான்காவது நாள் தேநீர் இடவேளைக்குமுன் அவுஸ்திரேலிய அணி 125 ஓட்டங்களால் வெற்றி யீட்டியமை குறிப்பிடத்தக்கது.

ஐ.சி.சியின் கிரிக்கெட் விவகாரங்களுக்கான பொது முகாமையாளர் டேவ் ரிச்சட்ஸன் ஐ.சி.சியின் பிரதம போட்டி மத்தியஸ்தர் ரஞ்சன் மடுகல்ல ஆகியோர் தமது தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முன் போட்டியின் போது பதிவு செய்யப்பட்ட வீடியோக்கள், போட்டிகளை நடத்திய நாட்டின் கிரிக்கெட் சபையின் அறிக்கை உட்பட அனைத்து சான்றிதழ்களையும் பரிசீலிப்பர் என ஐ.சி.சி. அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி ஆடுகளத்தை 2004ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய-இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி நடைபெற்ற மும்பை ஆடுகளத்துடன் ரிக்கி பொண்டிங் ஒப்பிட்டிருந்தார்.

2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற அப்போட்டியில் எந்தவொரு அணியும் 205 ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை.

இதேவேளை காலி ஆடுகளத்தில் முதல் நாளிலேயே போட்டியின் 5ஆவது நாள் போன்று உணர்ந்ததாக அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கெல் கிளார்க் கூறியிருந்தார்.

# யு.எஸ்.ஓபன் டென்னிஸ் தொடர்; வோஸ்னியாக்கி, செரீனா காலிறுதியில்



(நியூயோர்க்)

யு.எஸ். ஓபன் டென்னிசில் நம்பர் 1 வீரரான செர்பியாவின் ஜோகோவிக் 7:6, 6:4, 6:2 என்ற நேர்செட்டில் உக்ரைனின் அலெக்சாண்டாரை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார். நம்பர் 1 வீராங்கனையான டென்மார்க்கின் வோஸ்னியாக்கி 6:7, 7:5, 6:1 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் குஸ்நட்சோவாவையும், செரீனா வில்லியம் (அமெரிக்கா) 6:3, 6:4 என்ற நேர்செட்டில் செர்பியாவின் அனா இவானோவிக்கை தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் யூஎஸ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் 4ஆவது சுற்றில் ரஷ்யாவின் சுவனரேவா, ஜேர்மனியின் சபைன் லிசிக்கியை சந்தித்தார்.

இதன் முதல் செட்டை 6:2 என சுவனரேவா எளிதாக வென்றார். இரண்டாவது செட்டிலும் தொடர்ந்து அசத்திய இவர் 6:3 என கைப்பற்றினார். இறுதியில் 6:2, 6:3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்ற சுவனரேவா காலிறுதிக்கு முன்னேறினார்.

**ஸ்டோசுர் அபாரம்**

மற்றொரு போட்டியில் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர், ரஷ்யாவின் கிரிலென்கோவை 6:2, 6:7, 6:3 என போராடி வென்று காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

மற்ற 4ஆவது சுற்றுப் போட்டிகளில் இத்தாலியின் பெனிட்டா, ஜேர்மனியின் கெர்பெர் வெற்றிபெற்று காலிறுதிக்குள் நுழைந்தனர்.

**நடால் அசத்தல்**

ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றில் உலகின் நம்பர் 2 வீரர் ஸ்பெயினின் நடால், ஆஜென்ரீனாவின் நல்பாண்டியனை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் 7:6, 6:1, 7:5 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே, ஸ்பெயினின் பெலிசியானோ லோபசை, 6:1, 6:4, 6:2 என்ற செட்கணக்கில் வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

பிற 3ஆவது சுற்றுப் போட்டிகளில் ஆண்டி ரோடிக்,ஜான்இஸ்னர்,டொனால்ட்யங்(அமெரிக்கா), ஜைல்ஸ் முல்லர் (லக்சம்பர்க்), டேவிட்பெரர் (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

**தடுமாறி விழுந்தார் நடால்**

நியூயோர்க்கில் வெயில் கடுமையாக உள்ளது. இதனால் வீரர்கள் விரைவில் சோர்வாகின்றனர். மூன்றாவது சுற்றுப் போட்டியில் வென்ற நடால், நேரடியாக பத்திரிகையாளர் சந்திப்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

மிகவும் களைப்புடன் காணப்பட்ட நடால், கழுத்தை முன்னும் பின்னும் அசைத்தபடியே இருந்தார். இடது கையால் முகத்தை மூடிய அவர், பத்திரிகையாளர்களைப் பார்த்து கேள்வி கேட்பதை நிறுத்துமாறு கூறிவிட்டு, திடீரென தனது கதிரையிலிருந்து கீழே விழுந்தார்.

உடனடியாக எழுந்த நடால் ஐஸ் பேக்கை கொண்டு வலியுடன் இருந்த கால் பிடிப்புக்களில் ஒத்தடம் கொடுத்தார். பின்பு நடால் கூறுகையில், போட்டியில் வெற்றி பெற்றது மகிழ்ச்சி என்றாலும் இந்தச் சம்பவம் இங்கு நடந்தது துரதிருர்ஷ்டவசமானது என்றார்.

# சர்ச்சை விளம்பரம் வாபஸ்!

நியூசிலாந்தை சேர்ந்த பீர் நிறுவனம் ஒன்று பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டக்காரர்கள் என்பது போன்ற விளம்பரம் ஒன்றை தயாரித்தது.

இதில் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் தௌப்பி நடித்திருந்தார்.

இந்த விளம்பரத்திற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு கடிதம் எழுதியது.

இந்நிலையில் சர்ச்சைக்குரிய விளம்பரம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.




சிம்பாவேக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இதற்கான வெற்றிக் கிண்ணத்துடன் பாகிஸ்தான் வீரர்கள்.

## மர்ம மனிதர்களை...

யாழ். குடாநாட்டு மக்களிடையே அண்மைக் காலமாக நிலவி வருகின்ற பீதி மற்றும் பதற்றநிலை தொடர்பில் ஆராய்ந்து அதற்கான தீர்வு காணும் வகையில் நேற்று யாழ். மாவட்ட கேட்போர் கூடத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின்போதே மக்களினால் மேற்படி குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக பொது மக்கள் சார்பாக பலரும் கருத்துக்களை தெரிவித்தனர். அதில் கூறப்பட்டுள்ளதாவது,

நாவாந்துறைப் பகுதியில் மக்கள் மீது இராணுவத்தினராலும் பொலிஸாராலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மர்மமனிதன் என சந்தேகிக்கப்படும் நபர்கள் அப்பகுதியில் நடமாடுவதை அறிந்த மக்கள் அவர்களை துரத்திச் சென்றனர். ஆனால், மர்ம நபர்கள் இராணுவ முகாமிற்குள் சென்று மறைந்ததையடுத்து அவர்களை எங்களிடம் ஒப்படையுங்கள் என இராணுவத்தினருடன் பொதுமக்கள் முரண்பட்டனர்.

ஆனால் அவர்களை ஒப்படைக்க இராணுவத்தினர் மறுத்ததையடுத்து அங்குகூடிய மக்கள் சில நிமிடங்களில் அந்த இடத்தை விட்டு தமது வீடுகளுக்கு சென்று விட்டனர்.

பதற்றநிலை கட்டுப்பாட்டுக்குள் வந்து பல மணி நேரத்திற்கு பின்பு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் மக்களைக் கதறக் கதற அடித்துக் காயப்படுத்தினர்.

அந்த தாக்குதல் சம்பவத்தில் நாவாந்துறையில் காயப்படுத்தப்படாதவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. காயமடைந்தவர்கள் வைத்திய சாலைக்கு சென்றுவருவதற்கு கூட பயப்பட்டனர் என நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொது மக்கள் சார்பில் விபரிக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரிவித்த மற்றொருவர்;

இராணுவத்தினரும் பொலிஸாரும் மக்களை நேசிப்பவர்கள் என்றால் எவ்வித நிபந்தனையும் இன்றி எங்கள் பகுதிகளில் கைது செய்த பொது மக்களை விடுதலை செய்ய வேண்டும்.

இதந்தக் கலவரம் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டது என இராணுவத்தினர் குற்றஞ்சாட்டுகின்றனர். இதுவொன்றும் திட்டமிடப்பட்டதல்ல. மக்கள் மர்ம மனிதன் என சந்தேகிக்கப்பட்ட நபர்களைத் துரத்திச் செல்லும்போது இராணுவத்தினர் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததால் ஏற்பட்டதே என அவரால் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாது மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் சார்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்ட சமாதானம் எல்லா மக்களும் நிம்மதியாக வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்டது. அதில் மக்கள் சந்தேகம் கொள்ளும் வகையில் இராணுவத்தினர் நடந்து கொள்ளக் கூடாது எனவும் குற்றம் சாட்டப்பட்டது.

கிறீஸ் மனிதனை மக்கள் துரத்தி வரும்போது உடனடியாக அந்த இடத்திற்கு இராணுவத்தினர் வந்து அவர்களை மக்களிடமிருந்து காப்பாற்றுவதோடு மக்களை அடித்து காயப்படுத்துகின் றனர்.

மக்களுக்கு பாதுகாப்பு வழங்க இராணுவத்தினர் உள்ளனரா அல்லது கிறீஸ் மனிதனுக்கு பாதுகாப்பு வழங்க இராணுவத்தினர் உள்ளனரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

இந்த கிறீஸ் மனிதன் பின்னணியில் அரசாங்கம் செயற்படுவதாகவும் அதற்கு இராணுவத்தினர் துணை போவதாகவும் மக்கள் அச்சப்படுகின்றனர்.

6 மணிக்கு முன்பு வீடுகளிற்கு சென்று விட வேண்டும் என இராணுவத்தினர் மக்களிடம் பகிரங்கமாக அறிவித்து வருகின்றனர்.

இவ்வாறு இராணுவத்தினர் மக்களிடம் கூறுவது மக்களை அச்சமடைய வைத்துள்ளது என மாநா ட்டில் கலந்து கொண்டவர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை இந்த மாநாட்டில் மத குருமார்கள் தமது கருத்துக்களை கூறும்போது நாட்டில் ஏற்பட்ட சமாதானம் நிலைத்து இருக்க வேண்டும். மக்கள் நீண்ட காலத்திற்கு பின்புதான் நிம்மதியாக வாழும்சூழல் ஏற்பட்டது எனவும் கூறினர். (ச-5,8)

## சீமான்...

எதிர்ப்புத் தெரிவித்து, பொலிஸாரின் தடையையும் மீறி நடைபயணம் மேற்கொண்ட திரைப்பட இயக்குநர் சீமான் உட்பட சுமார் ஆயிரம் பேர் நேற்று செவ்வாய்க்கிழமை தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இம்மூவரையும் தூக்கிலிடுவதற்காக வேலூர் முதல் சென்னை வரை நடைபயணத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நடைபயணத்திற்கு பொலிஸார் அனுமதியளிக்கவில்லை.

எனினும் பொலிஸாரின் தடையையும் மீறி நடை பயணம் தொடங்கியதை அடுத்து சீமான் உட்பட சுமார் ஆயிரம் பேர் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுத்துவரும் இயக்குநர் சீமான் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல தடவை கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் தமிழக முதலமைச்சராக ஜெயலலிதா கடந்த மே மாதம் பதவியேற்ற பின்னர் சீமான் கைது செய்யப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## கிறீஸ்...

இல்லை. நாட்டைக் குழப்புவதற்காக திட்டமிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. வெளிநாட்டிலுள்ள சில சக்திகள் பணத்தைக் கொடுத்து இந் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அவர் குற்றஞ்சாட்டினார். (ச-1)

## மாணவன்...

அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும் வாகனம் வேறு இடத்திற்கு செல்வதை அவதானித்த மாணவன் கூக்குரலிடவே அம் மாணவனை அவர்கள் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர். பின்னர் லொறி ஒன்றில் ஏறி அம் மாணவன் கொழும்புத் துறைப்பகுதியில் இறங்கியுள்ளான்.

அங்கிருந்து அதிபர் ஒருவரின் உதவியுடன் மாணவன் நேற்றிரவு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (எ-1)

## பதற்றத்தைக்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிக அக்கறையுடன் உள்ளார்.

இனந்தெரியாத நபர்களின் நடமாட்டம் குறித்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அவர் என்னை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியுள்ளார்.

மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு இந்த செயற்குழு தொடர்ந்து செயற்படும்.

மாதம் ஒரு முறை கூடி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்க்கமான முடிபுகளை எடுக்கும்.

இந்த உயர்மட்ட செயற்குழுவானது மக்கள் எதிர் நோக்கி வருகின்ற உடனடிப் பிரச்சினைகளுக்கு விரைந்து செயற்பட்டு தீர்வினை முன்வைக்கும் என நான் இந்த இடத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

முன்பும் ஒருமுறை யாழ்.மாவட்டத்திற்கு நான் வந்திருந்தேன். அது இவ்வாறான பிரச்சினைக்கல்ல.
அது மீள்குடியேற்றம் தொடர்பாக அறிந்து செல்வதற்கு. ஆனால் இந்த கிறீஸ் மனிதன் வதந்தியானது மக்களின் உயிரோடு தொடர்புடையது. அதைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.
இதற்கென சிவில் பாதுகாப்பு குழுவை அமைப்பது எனவும் நாம் தீர்மானித்துள்ளோம். இந்தக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள் வாரந்தோறும் ஒன்று கூடி மக்களை அழைத்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து அரசாங்கத்திற்கு நிலைவரம் தொடர்பாக அறிவிக்கவுள்ளனர்.
இம்மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க, யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தலுவத்த, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களான மு. சந்திரகுமார், சி.அலன்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர்.
அத்துடன் யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், யாழ். வர்த்தக சங்கப்பிரதிநிதிகள், யாழ். மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பலரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5,6)

## நல்லிணக்க...

பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பதற்கான நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் உதவிப் பணியாளர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
குடிசனச் செறிவு மிக்க இடங்கள் மீது இராணுவம் எறிகணைத் தாக்குதல் நடத்தியதாகக் குற்றம்சாட்டும் இந்த அறிக்கையில் போராளிகள் அல்லாதோரை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியதாக விடுதலைப்புலிகள் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
அரசினால் அமைக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு போரின் இறுதிக் கட்டம் தொடர்பாக செய்த மீளாய்வு - அதிகாரம் தொகுப்பு மற்றும் நடைமுறை என ஒவ்வொரு மட்டத்திலும் தவறுகளைக் கொண்டது என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
முன்னாள் அரசாங்க அதிகாரிகளை அதிகமாகக் கொண்ட இந்த ஆணைக்குழு சட்ட விரோத படுகொலைகள், காணாமற்போதல்கள் உள்ளிட்ட ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட வன்முறைகள் தொடர்பான சான்றுகளை விசாரிக்கத் தவறிவிட்டதாகவும் அனைத்துலக மன்னிப்புச் சபையின் இந்த அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது. இன்று இந்த அறிக்கையை அனைத்துலக மன்னிப்புச்சபை அதிகாரபூர்வமாக வெளியிடவுள்ளது

## பிளேக்கின்...

வின் பிரதி இராஜாங்க அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக்கின் இலங்கை விஜயம் குறித்து இதுவரை எவ்வித அறிவிப்பும் வரவில்லை என அமெரிக்கத் தூதரகத்தின் ஊடக அதிகாரி கிறிஸ்ரொபர் எல்மஸ் கூறியுள்ளார்.
இலங்கைக்கு கடந்த 29ஆம் திகதி விஜயம் செய்யவிருந்த ரொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்காவைத் தாக்கிய சூறாவளியால் தனது பயணத்தை இறுதி நேரத்தில் பிற்போட்டிருந்தார்.
எனினும் அவர் எதிர்வரும் 12-ம் திகதி கொழும்புக்கு செல்லவுள்ளதாக கொழும்பில் இருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. (ச-5)

## மர்ம மனிதனின்...

அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

யாழ்.குடாநாடு முழுவதும் ஒருவித பீதியும் பதற்றமும் ஏற்பட்டுள்ளது. இதைக் கட்டுப்படுத்த அரசு இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

ஆகஸ்ட் 30-ம் திகதி கோண்டாவில் பிரதேசத்தில் பல சம்பவங்கள் இடம்பெற்றன. அதேதினத்தன்று இரவு 8.30 மணியளவில் திருநெல்வேலி பிரதேசத்தில் மற்றுமொரு சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் கொக்குவில் யாழ். மருத்துவ பீடத்திற்கு அருகாமையிலும், செப்படம்பர் முதலாம் திகதி உரும்பிராய், குருநகர் போன்ற பிரதேசங்களிலும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. யாழ்.மக்களை அச்சத்தில் ஆழ்த்தும் ஒரு சடுதியான செயலாகவே இதை மக்கள் கருதுகின்றனர்.

தற்போது 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினர் யாழில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் 20-30 வீத பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயத்திலேயே காணப்படுகின்றது. வீதித் தண்டகளும் 24 மணிநேர பாதுகாப்பு ரோந்துச் சேவையும் காணப்படுகிறது. இந்நிலையில் அத்துமீறல் விடயங்களை தடுப்பதற்கு படையினரால் முடியும்.

ஆயினும், இது நடைபெறாமையின் மூலம் தெளிவாகும் விடயம் என்னவெனில் இதைத் கட்டுப்படுத்த அரசாங்கத்திற்கு எதுவித தேவையும் இல்லை என்பதும், அரசாங்கத்திற்கு மர்ம மனிதனின் மர்மம் புரியும் என்பதாகும்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக இதுவரை அரசாங்கம் எடுத்த நட வடிக்கைகள் என்ன? இது சம்பந்தமாக எடுக்க இருக்கும் நடவடிக்கைகள் தான் என்ன? என்று பிரதம மந்திரியிடம் ரணில் கேள்வி எழுப்பினார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த அனைத்து உயர் பாதுகாப்பு வலயங்களும் இரத்தாகின்றன.

அதன் அடிப்படையில் உயர் பாதுகாப்பு வலயத்திற்காகப் பெற்றுக் கொண்ட காணிகள் உரிய உரிமையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மீண்டும் இவைகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? என்றும் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார். எனவே இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமிக்க வேண் டும்.

இதற்காக ஆலோசனை வழங்கக்கூடியவர்களையும் இணைத்துக் கொண்டு அந்தக் குழுவின் மூலம் இந்த விடயம் சம்பந்தமாக ஆராய்ந்து உரியநடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். (எ-1)

## உயர் பாது...

தெரிவித்தார்.
அவசரகாலச்சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் அதிஉயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறியதுடன் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்காக பொறுப்பேற்கப்பட்ட காணிகள் அவற்றை சட்டரீதியான உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும்படி கூறினார். இதற்கு பதிலளிக்கும் போது அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களை உரிமையாளர்களுக்கு வழங்க அரசு அனைத்து நடவடிக்கைகள்ளயும் எடுத்துள்ளது. அத்துடன் உள்நாட்டு வெளிநாட்டு அழுத்தங்களினால் யாழ். மற்றும் குடாநாட்டின் அமைதிக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-9)





A/L எழுதிய மாணவர்களுக்கான
MyWay இன் ENGLISH WORKSHOP
08.09.2011 வியாழக்கிழமை
பிரிவு 1 : காலை 8.00-10.30 பிரிவு 2 : காலை 11.00-1.30
பிரிவு 3 : மாலை 3.00-5.30
அனுமதி இலவசம்
கற்கைநெறி புத்தகம் மற்றும் சான்றிதழ் இலவசம்.
குளிர்பானம், சிற்றுண்டி வழங்கப்படும்
MyWay 182, Stanley Road, Jaffna 077 33 63 456

பணியாளர் தேவை
* 50 வயதிற்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் (ஆண்) (6077)
* எழுதுநர்கள் (பெண்கள்)
வேலை இடம்: யாழ்.நகர் 0775040714

MyWay இன் SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 07.09.2011
வார வகுப்பு ( திங்கள் புதன் வெள்ளி )
பிரிவு 1 : காலை 8.00-9.30 பிரிவு 2 : காலை 9.30-11.00
பிரிவு 3 : மாலை 3.00-4.30 பிரிவு 4 : மாலை 4.30-6.00
சனி, ஞாயிறு வகுப்பு
பிரிவு 1 : காலை 8.00-10.00 பிரிவு 2 : காலை 10.00-12.00
பிரிவு 3 : மாலை 2.00-4.00 பிரிவு 4 : மாலை 4.00-6.00
MyWay 182, Stanley Road, Jaffna 077 33 63 456

திருமண நல்வாழ்த்துக்கள்
ஜோர்ஜ் வில்மன் டிலைக்சனா
திருமணப்பந்தத்தில் இன்று இணையும் ஜோர்ஜ் வில்மன்-டிலைக்சனா தம்பதியினர் இறைவனின் கிருபையால் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ மன மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.
(ஆ)
வலம்புரி குடும்பம்

கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள்
மற்றைய 5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
After A/L ?
Diploma Courses.. Duration 1 or 2 Month
Free Course fee*
*Ms Office, AutoCAD,
*Web Designing *Hardware
*Accounting *DTP *English

இலவச முன் பதிவுகளுக்கு இன்றே உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்
Free Course fee : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL,
MCS Supported By UNDP/JRRP
324, Palaly Road, Campus Junction, Jaffna.
www.mcsitcampus.org
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.